# இஸ்ரேலிய இராணுவ நிலைகள் மீது அரபுக்களின் பதில் தாக்குதல்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELA NADU

EELANADU

National Tamil Daily

தேசிய தினசரி

மலர் 11

இதழ்: 213

தபால் பெட்டி எண் 49

போன்: 389

யாழ்ப்பாணம் ஆவணி 28 ஜ: ஆகிர் 30 சனிக்கிழமை [13-9-69]



ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற் பணம் கட்ட வேண்டும்

தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


கெய்ரோ, செப் 12

ஏறத்தாழ நூறு ஐக்கிய அரபுக் குடியரசு போர்விமானங்கள் நேற்று சைனுப் பாலைவனப்பகுதியில் இஸ்ரேலிய ராணுவத்தளங்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன.

1967 ம் ஆண்டு சண்டைக்குப்பின் நடைபெற்ற மிகப் பெரிய விமானச் சண்டை இதுவென்று அவதானிகள் கூறுகிறார்கள்.

இஸ்ரேலியர்களின் ராணுவத்தளங்கள், ராடார் நிலைகள், போன்றவற்றின் மீது அரபுப்படைகள் பெரும் தாக்குதல் நடத்தி பலத்த நஷ்டம் விளைவித்ததாக அறிவிக்கப்பட்டது. இஸ்ரேலியர் தரப்பில் பலத்த ஆள்சேதம் விளைவித்ததாகவும் அரபுகள் அறிவித்திருக்கிறார்கள்.

ஐக்கிய அரபுக்குடியரசு விமானங்கள் வடசைனுப் பிரதேசத்தில் மூன்றுமுறை நடத்திய தாக்குதல்களில் போர்ப்படகுகள் பலவும், நான்கு சண்டைவிமானங்களும் கவிழ்க்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் இஸ்ரேலியர் விடுத்த ஒரு அறிக்கையில் அரபுப் படைகளின் ஏழுவிமானங்களை 9 சுட்டுத்தள்ளியதாகக் கூறினார்கள்.

அரபுக்கள் தங்கள் தரப்பில் ஒரு ஜெட்விமானம் மாத்திரம் வீழ்த்தப்பட்டதாகக் கூறினார்கள். இதர விமானங்கள்யாவும் தாக்குதலை நடத்திவிட்டுத் பக்திரமாகத் திரும்பிவிட்டதாகக் கூறினார்கள்.

இதற்கிடையில்ஏற்கனவே மத்தியதரைக்கடலில் நிலை கொண்டிருக்கும் ரஷ்யக்கப்பற்படைகளோடு சேர்ந்து கொள்வதற்காக மேலும் 12 ரஷ்யக் கப்பல்கள் மத்திய தரைக்கடலை நோக்கிப்புறப்பட்டுள்ளன

அண்மையில் இஸ்ரேலியர் சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கே ஊடுருவிச்சென்று நடத்திய திடீர் தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாகவே அப்பொழுது அரபுப்படைகள் இஸ்ரேலிய நிலைகள்மீது தாக்குதல் நடத்தியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

## யாழ்ப்பாண புகையிலைக்கு இந்தியாவில் கிராக்கி

### பண்டமாற்று ஒப்பந்தம் செய்யலாம்என்கிறார் நல்லூர் எம். பி

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம் புகையிலைக்கும் இலங்கைப் பாக்குக்கும் இந்தியாவில் நல்ல கிராக்கியிருக்கிறது. இவைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யவும்இவற்றுக்குப் பதிலாக இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நமக்குத் தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்யவும் இந்திய அரசாங்கத்துடன் பண்டமாற்று ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளலாம் என்று நல்லூர் பிரதிநிதி டாக்டர் இ. எம். வி. நாகநாதன் வர்த்தக அமைச்சின் மான்யம் மீது மக்கள் பிரதி நிதிகள் சபையில் நடந்த விவாதத்தில் பேசுகையில் யோசனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலைஎன்று பெயர் பெற்ற புகையிலை முன்னர் இந்தியாவுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததென்றும் பின்னர் இந்திய அரசாங்கம் இந்த இறக்குமதிக்குத் தடை விதித்து விட்டதென்றும் கூறிய டாக்கர் நாகநாதன் இலங்கைக் கொட்டைப்பாக்கிற்கும் இந்தியாவில் நல்ல கிராக்கியிருக்கிறதென்றார்.

இந்தியாவில் இப்போது இயந்திர சாதனங்கள் பல உற்பத்தி செய்யப்படுகின்றன. அங்கு தயாராகும் இயந்திரங்கள் மேற்காசிய நாடுகள் பலவுக்கும் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன. ஜப்பான் நாட்டைப்போல இந்தியாவும்இயந்திரசாதன உற்பத்தியில் முன்னேறி வருகிறது. நமது நாட்டிலிருந்து புகையிலையையும் கொட்டைப்பாக்கையும் இந்தியாவுக்கு ஏற்றுமதிசெய்து இங்கிருந்து நமக்குத்தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்வது பயனுள்ளதாக இருக்கும் என்று டாக்டர் நாகநாதன் கூறினார். புகையிலைஏற்றுமதி மூலம் வடபகுதி விவசாயிகளுக்கும் கொட்டைப்பாக்கு ஏற்றுமதி மூலம் கண்டிப் பகுதி மக்களுக்கும் நன்மை கிடைக்கும் என்று நல்லூர் பிரதிநிதி கூறினார்.

### சுங்க காரியாலய துணிகர கொள்ளை

# ஆறு முக்கிய இடங்களுக்கு இரகசிய பொலிஸ் கோஷ்டி விரைந்துள்ளது

## விசாரணையில் புதிய தகவல்கள்

— நமது காரியாலய நிருபர் 'திரு' —

**யாழ்ப்பாணம், சனி**

**யாழ்ப்பாணம் சுங்க காரியாலயத்தில் நடைபெற்ற துணிகர கொள்ளையைத் தொடர்ந்து, விசேஷ இரகசிய பொலிஸ் கோஷ்டிகள் இலங்கையின் 6 இடங்களுக்கு இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொள்ள விரைந்துள்ளன.**

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்குக் கிடைத்த சில பிரத்தியேக தகவல்களைத் தொடர்ந்து சாதாரண உடையணிந்தபொலிஸ் கோஷ்டிகள் ஹொரணை, நீர்கொழும்பு, வல்வெட்டித்துறை, ஆனையிறவு, மாங்குளம், வவனியா ஆகிய இடங்களுக்கு அனுப்பப்பட்டன.

### 7 கைவிரல் அடையாளங்கள்

கைப்பற்றப்பட்ட சுங்க ஜீப் வண்டி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 7 கைவிரல் அடையாளங்களை சம்பந்தப்பட்ட நிபுணர்கள் மிகநுணக்கமாகப் பரிசோதனை செய்து வருகின்றனராம்.

களவுபோனவைகளில் கூடுதலானவை ஒளவையார் சேலைகள், இந்திய சாரங்கள் செபமாலைகள், ஆடம்பர அழகுப் பொருட்கள் என்று சுங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக் களவு சம்பந்தமாக தகவல் தரவிரும்புபவர்களை பொலிஸ் சுப்பிரின்டனின் தொலை பேசி இலக்கமான 7182 உடனே, உதவி பொலிஸ் சுப்பிரின்டனின் தொலை பேசி இலக்கமான 7240 உடனே, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 222, 205 உடனே அல்லது அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்துடனே தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களைப் பொலிஸார் வேண்டியுள்ளனர்.

இக் கொள்ளை சம்பந்தமாக சப்பவம் நடைபெற்ற [illegible]

வடபகுதி

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்றுமாலை இழுக்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

**முதலாம் பரிசு**

29 B 0197 ரூ. 83,290

**இரண்டாம் பரிசு**

08 X 0982 ரூ. 33,316

**மூன்றும் பரிசு**

28 M 0297 ரூ. 8,329

ரூபா416-45 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 20 [illegible] 0705 | 17 A 0536 |
| [illegible] | 15 B 0410 |
| 28 C 0453 | 23 D 0616 |
| 17 D 0692 | 17 D 0959 |
| 12 D 0647 | 27 E [illegible]47 |
| 03 F 0182 | 33 F [illegible]049 |
| 03 F 0159 | 06 D 0146 |
| 19 F 0511 | 11 G 0876 |
| 02 H 0761 | 22 H 0947 |
| 26 H 0367 | 23 H 0297 |
| 01 H 0136 | 22 J [illegible]19 |
| 36 J 0040 | 06 J [illegible]14 |

## தெரிவானவர்களிடமிருந்து விபரம் கோரப்படுகிறது

பருத்தித்துறை, வெள்ளி

அண்மையில் வெளியான ஜி. ஸி. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளைத் தொடர்ந்து, பல்கலைக் கழகக் கல்விக்குத் தகுதி வாய்ந்தவர்களெனக் கணிக்கப்பட்டோரிடமிருந்து விபரங்கள் கோரப்படுகின்றன. இவர்கள் எப்பிரிவிற் சேர விரும்புகின்றனரென்றும், தாம் புக விரும்பும் பல்கலைக்கழகங்களை வரிசைக் கிரமப்படி குறிக்குமாறும், கோரப்பட்டுள்ளனர்.

இடங்கள் மேலதிகமாக இருக்குமாயின் மூன்று பாடங்களிற் சித்தியெய்தி, நாலாம் பாடத்தில் 25 புள்ளிகளுக்குக் குறையாமற் பெற்றவர்களுக்கும் பல்கலைக் கழகத்துட் புகும் சந்தர்ப்பம் கிடைக்குமென அண்மையில் வெளியான பல்கலைக்கழக விதிகளடங்கிய கைநூல் ஒன்று கூறுகிறது. இக்கூற்றின்படி மூன்று பாடங்களில் இரண்டில் விசேட சித்தி பெற்று நாலாம் பாடத்தில் தவறியவர்கள் பலருக்கு முக்கிய இடமளிக்கப்படலாமென்றும் தெரிகிறது. மேற்படி விபரங்கள் இம்மாதம் 15-ம் திகதிக்குமுன் அனுப்பப்படல் வேண்டுமென்று தெரிகிறது. இந் நிலையில் [illegible]

### தமிழ் இல்லாத காரணத்தால்

## பால்சபை அழைப்பிதழை கோப்பாய் எம்.பி. திருப்பியனுப்பினார்

யாழ்ப்பாணம் சனி

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சடிக்கப்பட்ட தேசிய பால்சபையின் அழைப்பிதழ் ஒன்றை கோப்பாய் எம்.பி, திருஎஸ். கதிரவேலுப்பிள்ளை ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனு[illegible]

அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டிருந்தது.

இம்மாதம் 22ந் திகதி பிரதமர் டட்லிசேனநாயகாவினால் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட விருக்கின்றது.

அழைப்பிதழில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் அடிக்[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர் சுந்தரலிங்கத்துக்குக் கிடைத்த சில பிரத்தியேக தகவல்

பட்ட நிபுணர்கள் மிகநுணக்கமாகப் பரிசோதனைசெய்து வருகின்றனராம்.

களவுபோனவைகளில் கூடு

அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்துடனே தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்களைப் பொலிஸார் வேண்டியுள்ளனர்.

இக் கொள்ளை சம்பந்தமாக சம்பவம் நடைபெற்றபோது கடமையிலிருந்த காவலாளியான சூசைமுத்து என்பவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே. (கா. நி)

| | | |
|---|---|---|
| 28 M 0297 | | ரூ. 8,329 |

ரூபா416-45 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 20 [illegible] 0705 | 17 A 0536 | 03 F 0182 | 33 F 0049 |
| 24 A 0926 | 15 B 0410 | 03 F 0159 | 06 D 0146 |
| 23 B 0076 | 04 B 0201 | 19 F 0511 | 11 G 0876 |
| 20 B 0710 | 18 B 0437 | 02 H 0761 | 22 H 0947 |
| 05 C 0892 | 09 C 0318 | 26 H 0367 | 23 H 0297 |
| 13 C 0736 | 18 C 0992 | 01 H 0136 | 22 J [illegible]19 |
| | | 36 J 0040 | 06 J [illegible]14 |
| | | 05 J 0234 | 33 J 0853 |
| | | 21 K 0808 | 08 K 0122 |
| | | 28 K 0583 | 26 K 0841 |
| | | 09 K 0887 | 19 K 0934 |
| | | 21 L 0939 | 20 L 0491 |
| | | 09 L 0321 | 10 L 0617 |
| | | 20 L 0656 | 10 L 0448 |
| | | 24 L 0454 | 20 M 0946 |
| | | 27 M 0396 | 20 M 0218 |
| | | 12 N 0810 | 27 N 0070 |
| | | 11 N 0624 | 12 O 0419 |
| | | 21 O 0626 | 34 O 0923 |
| | | 23 P 0571 | 23 P 0020 |
| | | 13 P 0842 | 02 P 0750 |
| | | 33 Q 0603 | 03 Q 0673 |
| | | 10 R 0112 | 22 R 0195 |
| | | 25 R 0541 | 22 R 0574 |
| | | 28 R 0609 | 10 R 0044 |
| | | 20 R 0248 | 10 R 0644 |
| | | 23 R 0347 | 08 S 0212 |
| | | 09 S 0519 | 18 S 0565 |
| | | 15 S 0268 | 36 S 0616 |
| | | 16 S 0708 | 08 T 0665 |
| | | 27 T 0949 | 26 T 0309 |
| | | 17 T 0936 | 02 U 0915 |
| | | 18 U 0123 | 08 V 0618 |
| | | 22 V 0748 | 02 V 0207 |
| | | 01 V 0240 | 02 V 0041 |
| | | 11 W 0288 | 15 W 0971 |
| | | 27 X 0593 | 20 X 0650 |
| | | 05 X 0147 | 07 X 0170 |
| | | 12 Y 0473 | 25 Y 0755 |
| | | 10 Z 0582 | 22 Z 0551 |
| | | 33 Z 0278 | 19 Z 0836 |

வர்கள் பலருக்கு முக்கிய இடமளிக்கப்படலாமென்றும் தெரிகிறது. மேற்படி விபரங்கள் இம்மாதம் 15-ம் திகதிக்குமுன் அனுப்பப்படல் வேண்டுமென்று தெரிகிறது. இந் நிலையில் பரீட்சை எடுத்தபின் வேலைகளிற் சேர்ந்தவர்கள் பலர் பல்கலைக் கழகத்துட் புகுவதா அன்றித் தொடர்ந்து வேலையிலிருப்பதா என்று தீர்மானிப்பதில் கஷ்டப்படுவதாகவும் தெரிகிறது.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சடிக்கப்பட்ட தேசிய பால்சபையின் அழைப்பிதழ் ஒன்றை கோப்பாய் எம்.பி, திருஎஸ். கதிரவேலுப்பிள்ளை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பினர்.

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றது வெரகலை என்ற இடத்தில் பால்ப் பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றைத் திறப்பதற்குஇந்த பட்டிருந்தது.

இம்மாதம் 22ந் திகதி பிரதமர் டட்லிசேனநாயகாவினுல் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட விருக்சின்றது.

அழைப்பிதழில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும்அடிக்கப்பட்டுதமிழ்புறக்கணிக்கப்பட்டதாலேயே கோப்பாய் எம். பி. திரு எஸ்.கதிரவேலுப்பிள்ளை இதனைத்திருப்பி அனுப்பியுள்ளார். [கா. நி]

வடபகுதி

# பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியைச் சேர்ந்த உயர்தர பொலிஸ் அதிகாரிகள் பலரும் அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டனுன ஜனுப் எஸ். ஐ. அசீஸ் முதலாம் திகதி பதவியிலிருந்து ஓய்வு பெறுகின்ருர். இவருக்காக கிளிநொச்சியிலிருந்து உதவி பொலிஸ் சுப்பிரின்டனுன திரு. சில்வா யாழ்ப்பாணம் வருகின்ருர்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. நெவில் டி. சில்வா கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசையிலிருந்து உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. டபிள்யூ. ஏ. ஜோகிம் காங்கேசன்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னருக்கு உதவி பொலிஸ் சுப்பிரின்டனுக திரு. பிலிப் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. ஹெரத் அனுராதபுரத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பெற்றுள்ளார்.

சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜேக்கப் காங்கேசன்துறை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்றுள்ளார் (கா. நி.)

# பூநகரி காட்டினுள் தொங்கும் சடலம்

— நமது பூநகரி நிருபர் பொ.தில்லைநாதன் —

பூநகரி மன்னர் வீதியிலுள்ள நடுக்காட்டினுள் பாலை மரத்தில் ஓர் ஆணின்சடலம் கயிற்றில் தொங்கிக்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பூநகரியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நேற்றுமுன்தினம் காடுவெட்டச் சென்ற ஒருவர் நாய்குரைப்பதைக்கண்டு போய்ப்பார்த்தபோது சடலம்தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதாகத் தெரிவித்தார். சூசை என்னும் இவரே கிராமசேவகருக்கும், காரியாதிகாரிக்கும் இதுபற்றித் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாகபொலிஸ் உயர் அதிகாரிக்கு காரியாதிகாரி தந்திமூலம் அறிவித்துள்ளார்.

மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் சடலத்திற்கருகில் மூன்று நிறத்தையுடைய ஓர் துவாயும், பச்சைச் சறமும் காணப்பட்டது.

இது ஒரு கொலையா, தற்கொலையா என்பது இன்னும் தெரியவில்லை, சடலம் இது வரையும் மரத்தில் தொங்கியபடியேஇருக்கிறது.புலன் விசாரணை நடைபெறுகிறது.

# பயங்கரமானசூழ் நிலையில் கார்வாலியோ காணப்பட்டார்

## இருல் வியாபாரி கடத்தல் வழக்கில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

மட்டுவில், வெள்ளி

''சுமார் ஏழமைல் வரை சாட்டை ஊடுருவி நடுக் காட்டினுள் சென்றோம், அங்கு மிக்வும் பயங்கரமான ஒரு சூழ்நிலையில் கார்வாலியோ கடத்தி மறைத்து வைத்திருக்கப்பட்டதைப் பாத்தோம். விறகுகள் குவிக்கப்பட்டிருந்ததையும் அங்கு யாரோ தங்கி இருந்துசமையல் செய்து சாப்பிட்டதற்கான அறிகுறிகளையும் நாம் காண முடிந்தது. கொக்கின் இறகுகளும் கிடந்தன.''

இருல் வியாபாரி கார்வாலியோவைக் கடத்திச் சென்று உயிருடன் கொழுத்தி எரிப்பதாக பயமுறுத்திய வழக்கில், பளைபொலிஸ் நிலைய அதிபராக அப்பொழுதுகடமையாற்றிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஜினசேன சாவகச்சேரீ மாவட்ட நீதிபதி திரு. ரி. எம். தருமலிங்கம் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இந்த வழக்கில் சதாசிவம் இரத்தினம், பிலிப் இராஜதுரை, கதிரவேலு காளிமுத்து. பொன்னுத்துரை தம்பிராசா, கந்தையா சின்னத்துரை, தனபாலசிங்கம் ஆகிய ஆறுபேர் மீதுகுற்றம் சாட்டப்பட்டுள்ளது'

வழக்கறிஞர் திரு. எஸ். கந்தசாமியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. கே.தம்பிரத்தினம் 1ம் எதிரியின் சார்பில் ஆஜரானுர் 2ம், 3ம், எதிரிகளின் சார்பில் வழக்கறிஞர் திரு வி. பி. கார்த்திகேசுவின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. எஸ். ஜெயசிங்கம் ஆஜரானுர். 4ம், 5ம் எதிரிகள் தரப்பில் வளக்கறிஞர் திரு. எஸ். கந்தசாமியின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு.வி என் நவரத்தினம் ஆஜரானுர் ஆறும் எதிரியின் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ் பி மயில்வாகனம் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு கே ஜெகநாதன் ஆஜரானுர் முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் திரு எஸ் எல் குணசேகரா வழக்கை நடத்திஞர்

சாவகச்சேரிமாவட்ட நீதிபதி திரு ரி எம் தருமலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த வழக்கில் பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஜினசேன சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:-

'எனக்குக் கிடைத்த முறைப்பாட்டின்படி நான் தருமபுரத்தை நோக்கிச் சென்றேன். வழியில் ஒரு கடைக்கு அண்மையில் கார்வாலியோவைச் சந்தித்தேன். இக்கடை பரந்தனிலிருந்து சுமார் 5 மைல் தூரம் இருக்கலாம். அங்கே 2-ம் எதிரியை கைதுசெய்து கொண்டு கார்வாலியோவையும் ஏற்றிக்கொண்டு 3-ம் எதிரியின் வீட்டிற்குச் சென்றேன்.

மூன்றும் எதிரி காளிமுத்துவின் வீட்டைச்சுற்றி அடர்ந்த காடு இருந்தது அவர் காட்டினுள்ளே ஓடினுர். சிறிது நேரத்தில் பொது மக்களில் சிலர் அவரைத் துரத்திப் பிடித்துக்கொண்டு வந்து என்னிடம் சேர்த்தனர். அதுவரை நான் 3-ம் எதிரியின் வீட்டின் முன்பக்கத்தில் நின்றிருந்தேன்.

இவர்களை என் காரில் ஏற்றிக்கொண்டு ஏனைய எதிரிகளையும் தேடிக் கைது செய்யும் முயற்சியில் ஈடுபட்டேன்.

அடுத்து கந்தசாமி மற்றும் சிலரின் சாட்சியங்களை பதிவுசெய்துகொண்ட நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 7-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

சண்டிலிப்பாய் கொலை வழக்கு

# அடுத்த பருவ கால விசாரணைக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

சண்டிலிப்பாய் கொலை வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. எல் டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் இவ்வழக்கு விசாரணையை அடுத்த பருவ கால விசாரணைக்கு ஒத்திவைத்தார்.

சொழும்பு சட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ. டி. எல். பெர்னுண்டோ சுகவீனமுற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நீதியரசர் விசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சண்டிலிப்பாயில் 68-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் திகதி கந்தையா நாகராசா, சங்கரப்பிள்ளை திருவாதிரை, சரவணமுத்து அப்புராசா, முத்தையா தர்மலிங்கம், ஆறுமுகம் பொன்னுத்துரை, நல்லதம்பி துரைராஜா, சுப்பிரமணியம் துரைராஜா ஆகிய 7 பேரும், சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி மடத்தடி ஒழுங்கையிலுள்ள வீடுகளுக்கு தீ வைத்து குழப்பம் விளைவித்தார்களென்றும், அதே நேரத்தில் அதே

(4- பககம் பார்கக)

# வி. வி. கிரி

சென்னை, செப். 12

பாரத ஜனுதிபதி திரு. வி. வி.கிரி 5 நாள் தமிழ்நாடு விஜயத்தை மேற் கொண்டு இன்று சென்னைவந்து சேர்ந்தார். அவருக்கு குதூகல வரவேற்பளிக்கப்பட்டது.

# "நான்குமைலுக்குஒரு பாடசாலை"

## தமிழர்கள் செய்த நல்ல விஷயம் குறித்து எஸ். ஜே. வி. பெருமிதம்

அளவெட்டி, வெள்ளி

''யாழ் மாவட்டத்தில் ஆறுகள் குறைவாக இருப்பதால் வளம் குன்றி இருக்கின்றது. ஆனுல் தமிழர் சில நல்ல விஷயங்களை செய்துள்ளனர். அதில் முக்கியமானவை பாடசாலைகள். இங்கு 4 மைலுக்கு ஒரு பாடசாலையாக எத்தனையோ பாடசாலைகள் இருக்கின்றன.''

இவ்வாறு காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அளவெட்டி அருணேதயாக் கல்லூரி 75-வது ஆண்டு விழாவில் கலந்துரையாற்றுகையில் கூறினுர்.

75 ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக 25 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மேடையையும் திரு. எஸ் ஜே. வி. திறந்து வைத்தார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் 75-வது ஆண்டு நிறைவையொட்டி ''அருணேதயம்'' என்ற மலரை திரு. செ. மயில்வாகனம் வெளியிட்டார். முதலாவது பிரதியை திரு அதனபாலசிங்கத்திடம் வழங்கினுர்

திரு எஸ் ஜே வி செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

யாழ் மக்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடியதாக பாடசாலைகள் அமைந்துள்ளன இங்குள்ள கிராமப் பாடசாலைகளில் கூட விஞ்ஞானம் படிப்பிப்பது நாம் பெற்ற பெரும் பேறுகளில் ஒன்ருகும்

எமது இனத்தை முன்னேற்ற எவ்வாறு பெரியார்கள் தொண்டாற்றுகிருர்கள் என்பது எமது பாடசாலைகளில்இருந்து அறியமுடிகின்றதுஇக்கல்லூரியைஅமைத்த அருணசலம் உடையாரையும், மற்றும் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது

இன்று தமிழ்ப் பிள்ளைகளுக்கு சுயபாஷை மூலம் கல்வி புகட்டப்படுகிறது ஆனுல் ஆங்கில மொழியும் முக்கியமாகத் தேவைப்படுகிறது

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வைத்தியத் துறைக்கு எடுக்கப்பட்ட 21 தமிழர்களில் 20 பேர் ஆங்கிலம் மூலம் கல்வி பயில ஆயத்தமானுர்கள் ஆனுல் ஒருவர் மட்டும் தமிழ் மூலம் கற்கப்போகிறேன் என்ருர் ஆனுல் அரசாங்கம் தமிழிலும், சிங்களத்திலும் படிப்பிக்க முடியாது என்று கூறியது இதன் பின்பு அரசாங்கத்தின் நெருக்கடியால் இவர்கள் ஆங்கில மொழி மூலமே கற்பிக்கப்படுகிருர்கள்

இதேபோல பொறியியல், மற்றும் துறைகளுக்கும் ஆங்கில மொழி அவசியமாக உள்ளது

(4-ம் பக்கம் பார்க்க)

## அபராதம்

மல்லாகம், வெள்ளி

லைசென்ஸ் இன்றி குடிபானம் விற்பனை செய்ததாக சங்கானைப் பொலிஸார் சின்னத்தம்பி பொன்னையா என்பவருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மல்லாகம் மாஜிஸ்திரேட் ரூபா 30 அபராதம் விதித்தாற்.

ஒரு பத்திரிகைச்செய்தி சம்பந்தமாக

# கா.பொ.இரத்தினம் ஆட்சி மன்றத்தில் உரிமைப் பிரச்னை

கொழும்பு, வெள்ளி

நேற்றுவெளியான தமிழ் தினசரி ஒன்றில் 'தமிழரசுக் கட்சிக் கொரடா நாடாளுமன்றத்தில் இல்லை என்ற தலைப்பில் வெளியாகிய ஒரு செய்தி சம்பந்தமாக தமிழரசுக்கட்சி கொரடாவும்கிளிநொச்சி எம். பி.யுமான திரு கா. பொ. இரத்தினம் ஆட்சி மன்றத்தில் உரிமைப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினுர். தமது கௌரவத்தைப் பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இச் செய்தி பிரசுரிக்கப் பட்டுள்ளதாக சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியாவின் கவனத்துக்கு திரு இரத்தினம் இச் செய்தியை கொண்டுவந்தார். தாம் ஆட்சிமன்றத்துக்கு தவருது சமூகமளிப்பதாகவும் திரு இரத்தினம் சுட்டிக் காட்டினுர்.

சபாநாயகர் இதற்குப்பதிலளித்துப் பேசுகையில், மேலெழுந்தவாரியாகப்பார்க்கையில் இது சபையின் உரிமையை மீறும் பிரச்னையாகத்தான் இருக்கிறதென்றும், மேல் நடவடிக்கைக்கு அச்செய்தியின் ஆங்கிலப் பிரதிஒன்றை தம்மிடம் சமர்ப்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். குறிப்பிட்ட பத்திரிகையின் ஆசிரியருக்கு சபாநாயகர் கட்டளை அனுப்பவிருப்பதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல விற்பனவு

## தேசியவீடமைப்பு அதிகாரியின் சம்மதத்தின்படி திறமையாய்க் கட்டப்பட்ட இடவசதியுள்ள பங்களா

யாழ்ப்பாண மாநகரசபை மத்தியில் நல்லூர் இறையில் உள்ள காணியும், பங்களாவும்

குறித்த காணியும் பங்களாவும், யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து (1, 1/2) ஒன்றரைமைலும், (யாழ்ப்பாணம் அரசாங்க செயலகம்) பழைய கச்சேரியிலிருந்து (1/2) அரைமைலும். யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமிகோவிலில் இருந்து (1/4) கால்மைலும் உள்ள சமீபமான தூரத்தில் இருக்கிறது.

### பிரசித்த ஏலம்

1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ந் திகதி பிற்பகல் (4-00) நாலு மணிதொடக்கம். யாழ்ப்பாணம் (கச்சேரி நல்லூர் வீதி) நல்லூர் மூத்தவிநாயகர் கோவில் வீதி, 10 4-ம் இலக்க இல்லத்தில் வசிக்கும் திரு. எம். முத்துலிங்கம் பெண் திருமதி அன்னலட்சுமியும் சேர்ந்து 1960-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 4-ம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்தநொத்தாரிஸ் திரு. எம். ஆர். காராளசிங்கம் முகதாவில் 4793 ம் இலக்கத்தில் முடித்த ஈட்டுறுதியின்பேரில் 1-7-1968 வரை தவறுதல் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 8999 சதம் 60-க்கு 1-7-1968 தொடக்கம் விற்பனவுத்திகதிவரை, அல்லது குறித்த ஈட்டுமுறியின் நியதிகளின்கீழ் கூறப்பட்ட எல்லாக் குற்றங்களோடும் முழுக்கொடுப்பனவுவரை வருஷமொன்றுக்கு நூற்றுக்கு 3, 3/4% மேலதிக வட்டியோடும் அத்தகைய மீளப்பெறுகைக்காக என்னுல் ஏற்பட்ட செலவுகளோடும் கூடிய ரூபா (12,091 சதம் 49) பன்னீராயிரத்துத் தொண்ணூற்றொன்று சதம் நாற்பத்தொன்பது. மீளப்பெறுவதற்காக குறித்த தேசிய வீடமைப்புச் சட்டத்தினதும், அதன் திருத்தச் சட்டங்களினதும், 9 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் இலங்கை அரசாங்கத்திற்கெனவும அதன் சார்பாகவும் செயல்புரியவென நியமிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளரான திரு. தனபால சிறிசேனவீரசிங்கத்தால் எனக்களித்த உத்தரவின்படியும், அதிகாரத்தின்படியும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்படும் காணியையும் வீட்டையும் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி. நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை. "கந்தன் வளவு" நிலப்பரப்பு (3) மூன்றும் குளி (10, 1/2) பத்தரையும் ஆனல், உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜோன் மனவல் அவர்கள் 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் 31-ந் திகதி அளந்து விபரிக்கப்பட்ட 861-ம் இலக்கப்படத்தின்படி நிலப்பரப்பு (3) மூன்றும் குழி (12, 1/2) பன்னிரண்டரையும் அதிற்கட்டப்பட்ட வீடும், கிணறும், பயிர்வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு இரத்தினம் பெண். இராசமணிக்குரிய ஆதனம் வடக்கு மூத்த விநாயகர் கோவில் வீதிக்குச் செல்லும் ஒழுங்கை, மேற்கு ஆறுமுகம் மகாலிங்கத்தின் ஆதனம். தெற்கு செல்லையா சுப்பிரமணியத்துக்கும் ஏனையோருக்கும் உரிய ஆதனம் 10/4 (பழைய) 14/7 (புதிய) மதிப்பீட்டைக்கொண்ட ஆதனம் இதடங்கலும். யாழ்ப்பாண மூத்தவிநாயகர் வீதியில்.

மறுவிபரங்கள் தேசிய வீடமைப்புத்திணைக்கள ஆணையாளரிடம் அவர் கந்தோரில் கொழும்பு—2, சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அறியலாம்.

107, பெரிய தெரு, யாழ்ப்பாணம். திகதி 2-9-69.

ஏ. பி. பிறின்ஸ்எதிர்மன்னசிங்கி, ஏலவிற்பனையாளர்.

1746

# பிரசித்த ஏலவிற்பனவு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள், ஏறக்குறைய எல்லையின் மத்தியில் நல்லூர் குறிச்சியில், மூத்த விநாயகர் கோவில் வீதி 10/4 இல. வளவ (கச்சேரி — [illegible]

# அறிவித்தல்

சங்கானையிலுள்ள பெற்ரோல் நிலையத்தில் முகாமையாளராக கடமையாற்றிய பிராம்பத்தை சங்கானையைச் சேர்ந்த திரு. கனகசபை சிவலிங்கம் என்பவர் எமது சேவையிலிருந்து 1-8-69 ந் திகதி தொடக்கம் விலக்கப்பட்டுள்ளார். ஆகையால் அவருக்கும் மேற்படி நிலையத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதையும், அவர் மேற்கொண்டும் ஸ்தாபனத்தின் பேரில்செய்யும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல என்பதையும் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேம்.

ப முத்தையாபிள்ளை அன் சன்ஸ் லிமிட்டெட், சங்கானை.

1748

# ஷஷ்டி அப்தபூர்த்தி

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை ஸ்ரீ பழனியாண்டவர் கோவில் ஆதீன அர்ச்சகரும், சுமார் நாற்பது வருட ஆசிரிய சேவை செய்து ஓய்வுபெற்ற ஆசிரியரும், ஐக்கியநாணய சங்கம், யாழ்நகர கூட்டுறவு சமாசம் என்பனவற்றின் தலைவருமான திரு. தி. ச. தியாகராஜஐயர் அவர்களின் ஷஷ்டிஅப்தபூர்த்தி (அறுபது ஆண்டு நிறைவு) இம்மாதம் முதலாம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.


வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிசிபோயா, போயா காலை 10-30
தேவ் குமார், மாலாசிங்கா நடித்த
மேரேலால்



வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிசிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-கே. ஆர். விஜயா நடித்த
ஊட்டிவரை உறவு


## வரி விளம்பரம்

### தேவை

16—20 வயதுக்குட்பட்ட இளைஞர் வேலைக்குத்தேவை. நேரில் வரவும். 5 வருட அனுபவமுள்ள மெக்கானிக்கல் பிற்றர் தேவை. XAVY கிளாஸ் வேக்ஸ் கோப்பாய்.

1397

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## சனி 13—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம் இசை, 1-30 செய்திச்சுருக்கம்

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-10 பேச்சு, 6-15 புல்லாங்குழல், 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 மெல்லிசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வீணை, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச் சுருக்கம்,


REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45p.m
Lionel Jeffries - Martha Hyer
in
FIRST MEN IN THE MOON



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
Poyadays 10-00 A.M.
Dean Martin Robert Mitchum
in
5 CARD STUD
(Techni Color)


# யாழ். உதைபந்தாட்ட நொக்கவுட் முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினுல், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் சென்றவார முடிவுகள் வருமாறு:

## புனிதவளன் வெற்றி

'புனிதவளன்' விளையாட்டுக் கழகத்திற்கும், குருநகர் 'யுத்கவுன்ஸில்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் புனிதவளன் வெற்றி பெற்றது.

இடைவேளையின் பின்ஆட்டம் ரசிப்பாக இருந்தது. புனிதவளன் கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் மகேந்திரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். யுத்தவுன்ஸில் கோஷ்டியின் முன்னணி வீரர் காந்தி ஒரு கோலைப் போட்டார். ஆட்ட முடிவில் புனிதவளன் கழகம் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## சென். அன்ரனீஸ் வெற்றி

பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்ருெரு ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் வெற்றி பெற்றது.

இப் போட்டி தொடங்கி முடிவடையும் வரை சற்று விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளைக்கு முன பாடும்மீன் கழகத்தினர் தவறுதலாக தமது கோல்வலைக்குள் பந்தைத் தட்டியதால் சென். அன்ரனீஸ் கழகம் எதிர்பாராமல் ஒரு கோலைப் பெற்றது. இடைவேளையின் பின், பாடும்மீன் கோஷ்டியினர் வேகமாகவே விளையாடினர். இக் கோஷ்டியின் வலது முன்னணி வீரர் ருதா மிகவேகமாக ஒரு கோலைப் போட்டார் இதன் பின் இக் கோஷ்டியினர் பல இலகுவான கோல்களை போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதினுல் இப் போட்டியில் தோல்வியடைந்தது. ஆட்டமுடிவில் சென். அன்ரனீஸ் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. சற். சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## குருநகர் கழகம் வெற்றி

குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும், வதிரி 'டைமன்ஸ்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில், யாழ் விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த போட்டியில், வதிரி டைமன்ஸ் கழகம் குறிப்பிட்ட நேரத்திற்கு மைதானத்திற்கு வராததால் குருநகர் விளையாட்டுக் கழகம் விளையாடாமலே வெற்றியைத் தேடிக் கொண்டது. (தே. நி)

# விநாயக சதுர்த்தி

உருத்திரபுரம், வெள்ளி

உருத்திரபுரத்தில் மணிக்கபிள்ளையார் கோவிலில் விநாயகசதுர்த்தி இம்மாதம் 15ந் திகதி நடைபெற உருத்திரபுரம் சைவ அன்பர்கள் ஒழுங்கு செய்துள்ளனர் அன்று காலைவிசேட அபிஷேகமும் ஆராதனையும், மாலை கதாப்பிரசங்கமும், விநாயகர் வீதி வரும் காட்சியும் இடம் பெறும்

# றிமாண்ட்

மல்லாகம், வெள்ளி

வட்டுக்கோட்டையில் வீடு உடைத்து ரூபா 43 திருடியதாக சங்கானைப் பொலிஸாரால்கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட இரு வாலிபர்களை நீதிபதி றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்


10ல் 7 நபர்கள் கோறா தேநீர் அருந்துபவர்கள்.
மகிழ்ச்சி ததும்பும் 7 கோறா தேநீர் அருந்துவோரை கண்டுபிடியுங்கள்.
ரூபா 17,000/= ரொக்கப்பரிசாக பெறுங்கள்.
புறூக் பொண்ட் கோறா தேயிலை போட்டியில் 200க்கும் அதிகமான பரிசுகள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரசித்த ஏலவிற்பனவு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லேக்குள், ஏறக்குறைய எல்லேயின் மத்தியில் நல்லூர் குறிச்சியில், மூத்த விநாயகர் கோவில் வீதி 10|4 இல. வளவு (கச்சேரி — நல்லூர் வீதி) சைவசமயஆலயங்கள் — பிரதானமாக நல்லூர் கந்தசுவாமி கோவில்; பாடசாலேகள்; கச்சேரி; பஸ்நிலேயம்; புகையிரத ஸ்தாபனம் ஆகியவற்றுக்கு மிக அண்மையில் இருக்கும் சிறப்பான மின்சார வசதியுள்ள கல்வீடும், காணியும், கிணறும், நீர்விநியோகம் அற்ற மலசலகூடமும், பர. நில. இலா 3. குளி 12 1|2. தேசிய வீடமைப்பு உதவி ஆணேயாளர் உத்தரவின்படி (இல. L. E. G/L/679) 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ம் திகதி மாலே 4 மணி தொடக்கம் அவ்விடத்தில் பிரசித்த ஏலவிற்பனேயில் விற்கப்படும்.

107, பெரியதெரு, யாழ்ப்பாணம். 2-9-69.

எ. பி. பிறின்ஸ் எதிர்மன்னசிங்கம் (உத்தரவுபெற்ற விற்பனேயாளரும் மதிப்பாளரும்). 1745



மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரீபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-கே. ஆர். விஜயா
நடித்த
## ஊட்டிவரை உறவு
(ஈஸ்ட்மென்கலர்)



JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p.m
Poyadays 10-00 A,M.
Dean Martin Robert Mitchum
in
"5 CARD STUD"
(Techni Color)





71-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா-சுரேஷ் கம்பைன்ஸ்
## குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளே கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!



ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
## எங்க ஊர் ராஜா

அப்பல்லோ -11

12-9-69 தொடக்கம் அப்பல்லோ-11 டெக்னிக்கலரில் 15 நிமிடங்கள் காண்பிக்கப்படும். விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து புறப்படுவதிலிருந்து சந்திரனில் கொடி நாட்டியதுவரை விபரமாகக் காண்பிக்கப்படும்.

APOLLO-11 Also Showing in color-for 15 minutes.



3-வது வெற்றி வாரம்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா வெலிங்டன் (யாழ்நகர்) 2-30 6-30 -930
திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலேயா ★ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்
## பக்த பிரகலாதா



16-ந் திகதி முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்நகர்)
ஆகிய திரைகளில்
ரி. ஆர். ராமண்ணவின் டைரக்ஷனில் உருவாகி
ரவிச்சந்திரன் ★ ராஜஸ்ரீ
நாகேஷ் ★ அசோகன் ★ ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனேகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
## நீயும் நானும்



## யாழ் - வின்ஸர்

தினசரி — 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா,
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி,
பண்டரிபாய், அசோகன்
நடிக்கும்
## புதியபூமி



முதற் பரிசு ரூபா 3,000/- இரண்டாவது பரிசு 1,000/-
இதை விட 25 பரிசுகள் ரூபா 200/- விகிதம் 25 பரிசுகள் ரூபா 100/- விகிதம் 50 பரிசுகள் ரூபா 50/- விகிதம் மற்றும் 108 வியாபாரிகளுக்கான பரிசுகள் ரூபா 25/- விகிதம் கவர்ச்சியாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புவோருக்கும் அதிகக் கூடுதலான பிரவேசப்பத்திரங்களே அனுப்புவோருக்கும் விசேட ரொக்கப் பரிசுகள்

இன்று அதிகமானேரால் விரும்பப்படும் தேயிலே கோரு தூள் தேயிலே என்பதில் சந்தேகமேயில்லே. அதன் புதுமையான நறுமணத்தை மக்கள் பெரிதும் அனுபவிக்கிருர்கள். சிக்கனமானது, ஏனெனில் ஒரு பக்கட் தேயிலேயில் பல கோப்பை தேநீர் தயாரிக்கலாம். நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு மேலான பெறுமதி கொண்டதனுல் மேலும் மேலும் பலர் கோரு தேயிலேயையே உபயோகிக்கிருர்கள்.

மேலேயிருக்கும் படத்தில் 10 நபர்கள் தேநீர் அருந்துவதைப் பார்க்கிறீர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எண் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 7 நபர்கள் கோரு தே நீர் அருந்துகிருர்கள். அவர்களின் மகிழ்ச்சியான திருப்தியான முகத்திலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம். இப்பிரவேசப் பத்திரத்தில் கோரு தேநீர் அருந்துவோரைக் குறிப்பிடுங்கள். உதாரணமாக படத்திலுள்ள 1ம் எண் நபர் கோரு தே நீர் அருந்துபவராஞல் பிரவேசப் பத்திரத்திலுள்ள முதல் வட்டத்தில் 1ம் எண்ணே இடுங்கள். இப்படி 7நபர்களின் எண்களேயும் வட்டத்தில் நிரப்புங்கள். உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதி பின் வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

கோரு தூள் தேயிலேப் போட்டி,
த. பெ. இல. 832 கொழும்பு.

நீங்கள் பரிசு பெற்ருல் உங்கள் வியாபாரிக்கும் பரிசு உண்டு. ஆகையால் பிரவேசப் பத்திரத்தில் உங்கள் வியாபாரியின் பெயர் விலாசம் அல்லது கடையின் பெயர் விலாசத்தைக் குறிப்பிடத் தவருதீர்கள்.

நீங்கள் எத்தனே பிரவேசப் பத்திரங்களேயும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு பிரவேசப்பத்திரத்துடனும் ஒவ்வொரு கோருத்தூள் எந்த அளவு உறையானுலும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். விடைகளே அனுப்பும் தபால்உறையின் இடது பக்க மேல் பகுதியில் நீங்கள் அனுப்பும் பிரவேசப் பத்திரத்தின் தொகையையும் கோரு தூள் தேயிலேப்போட்டி எனவும் குறிப்பிடல் வேண்டும்.

ஒரே உறையில் யார் அதிகக் கூடுதலான பிரவேசப் பத்திரங்களே அனுப்புகிருர்களோ அவர்களுக்கே மேலதிக பரிசுகளாக ரூபா 300/- ரூபா 200/- ரூபா 100/- பரிசளிக்கப்படும்.

இப்போட்டியில் புரூக் பொன்ட் (இலங்கை) லிமிட், ஈ. பி. கிறீசி அன் கம்பனி லிமிட், ஷெனித் அட்வடைசிங் ஆகிய ஸ்தாபனங்களேச் சேர்ந்தவர்கள் பங்கு பற்ற முடியாது.

இப் போட்டி பற்றி எவ்வித கடிதப் போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

மத்தியஸ்தர்களின் முடிவே இறுதியானது.

முடிவுத் திகதி 1969ம் ஆண்டு அக்டோபர் 7ம் திகதி. பரிசு பெறுவோரின் பெயர்கள் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்

முந்துங்கள்! இன்றே பங்கு பற்றுங்கள்!



பிரவேசப் பத்திரம்
○○○○○○○
உங்கள் பெயர்:-
விலாசம்:-
உங்கள் வியாபாரியின் பெயர்:-
விலாசம்:-
தெளிவாக எழுதவும்.

ZENITH




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஸிஜின் - சூ - என் - லாய் பீகிங்கில் திடீர் சந்திப்பு

ஹொங்கொங், செப்டம்பர் 12

**சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் நேற்றுத் திடீரென பீகிங் சென்று அங்கு சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.**

**திரு. கோஸிஜின் வட வியட்னும் அதிபர் டாக்டர் ஹோ-சி-மின் மரணச் சடங்குகளில் கலந்துகொண்டுவிட்டு கல்கத்தா வழியாக தாயகம் திரும்பும் போது பீகிங்கிற்கும் விஜயம் செய்தார்.**

திடீரென ஏற்பட்ட இந்த சந்திப்புப் பற்றி ஏற்கனவே வெளிப்படையாக அறிவிக்கப்பட்டிருக்காவிட்டாலும் இரு நாடுகளையும் சேர்ந்த அதிகாரிகள்பரஸ்பரம் மேற்கொண்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் இது நடந்ததாக அறிவிக்கப்பட்டது.

திரு. கொஸிஜின் ஹனேய் சென்ற பொழுது அவருக்கு முன்பதாகவே அங்கு விஜயம் செய்துவிட்டு சூ-என்-லாய் தாயகம் திரும்பியிருந்தார். இருநாட்டுத் தலைவர்களும் ஹனேயில் சந்தித்துக் கொள்ளக்கூடும் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் சூ-என்-லாய் பீகிங் திரும்பிவிட்டதால் இப்போதைக்கு இம்மாதிரி ஒரு சந்திப்பு ஏற்படமாட்டாதென்று கருதப்பட்டது.

இந்த நிலைமையில் திரு. கொஸிஜினும் திரு. சூ-என்-லாயும் திடீரென சந்தித்திருப்பது ராஜதந்திர வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்புக்கு சோவியத் தரப்பிலேயே முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இருதரப்பிலும் தங்கள் தங்கள் நிலைகளைத் தலைவர்கள் எடுத்து விளக்கியதாகவும் இதில் இரு தரப்பும் திருப்தியடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனல் பேச்சுவார்த்தைகள் எவ்வளவு நேரம் நீடித்தன என்பது பற்றியோ-என்ன பிரச்னைகள் பேசப்பட்டன என்பது பற்றியோ தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை. இரு தலைவர்களும் விமான நிலையத்திலேயே பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகவும், பேச்சுக்கள் முடிவுற்றவுடன் திரு கொஸிஜின் மாஸ்கோ திரும்பிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்தத் தகவல்களை மாஸ்கோ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. பீகிங்கிலும் இது ஊர்ஜிதம்செய்யப்பட்டது.

சீன-ரஷ்யத் தலைவர்கள் சுமார் நாலரை ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுது தான் முதற்தடவையாகச் சந்தித்திருக்கிறார்கள். இந்தச் சந்திப்பின்பொழுது திரு. சூ-என்-லாயுடன் அவரது துணைப் பிரதமர்கள் இருவரும் கலந்துகொண்டனர். திரு. கொஸிஜினுடன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவர் கலந்துகொண்டர்.

# "தேசிய ஐக்கியத்தின் முடிவுதான் என்ன?"

மல்லாகம், வெள்ளி

"கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழகத்தில் அறிவியல் பீடத் தலைவராக இருந்து வருந் தொண்டாற்றியவரும் பல காலமாக பதில துணைவேந்தராக பணி புரிந்தவரும் கல்வித்துறையில் பட்டங்கள் பெற்றவருமான பேராசிரியர் திரு. மயில்வாகனம் துணைவேந்தர் பதவியிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது பெரும் வெட்கக்கேடாகும். தேசிய ஐக்கியம் பற்றி பிரமாதமாகப் பேசி வரும் பிரதமரும், நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரதமரை ஆதரித்து நிற்கும் தமிழ்த் தலைவர்களும் அரசியலை வழி நடத்தி வரும் இக்கால கட்டத்தில் திரு. மயில்வாகனம் போன்ற ஒருவருக்கு இச்சதி ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது. அறிவுத் தெய்வம் குடி கொண்டிருக்கும் கலைக் கோயிலான பல்கலைக்கழகத்தில் பேதங்களுக்கு இடமே இல்லை. அறிவின் திறமைதான் முதன்மை பெறவேண்டும். பல்கலைக்கழகத்தில் இத்தகைய பேதம் நிலவினுல் தேசிய ஐக்கியத்தின் முடிவு தான் என்ன"?

நவாலியூர் பாரதி சனசமூக நிலையத்தினரின் பாரதிவிழா திரு. கே. செல்வராசா தலைமையில் நடைபெற்றபோது மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆசிரியர் எஸ். கதிரவேலு, என். நவரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

## புகார்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாவின் போது தெல்லிப்பழையைச் சேர்ந்த பெண் ஒருவர் தங்க வளையல் ஒன்றைத் தவற விட்டு விட்டதாகப் பொலிஸில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஈழத்தறிஞர்களை தமிழகத்துக்கு ஏற்றுமதி செய்யப்போகிறேன்'

## நுண்கலை செல்வன் இராகவன் கூறுகிறர்

வெள்ளவத்தை, வெள்ளி

"தமிழகத்திலிருந்து அறிஞர்களை இறக்குமதி செய்கிறர்கள் என்ற உணர்வு இங்கே இருந்துவருகிறது. ஆனல் நான் இங்கிருந்து தமிழகத்திற்கு அறிஞர்களை ஏற்றுமதி செய்யப்போகிறேன். ஈழத்தின் ஓர் ஆனந்தக்குமாரசாமியையும், ஒரு தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சண்முகநாதனையும், கலைப்புலவர் நவரத்தினத்தையும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்போகிறேன். ஆராய்ச்சித்துறைக்கு ஈழத்தவர்கள் செய்துள்ள நன்மைகளை வாய்விட்டுச் சொல்லமுடியாது. திரு. ஆனந்தக்குமாரசாமியைப் பற்றி நூலே எழுதியுள்ளேன்."

இவ்வாறு நுண்கலைச்செல்வர் திரு அ. இராகவன் கொழும்பு இறக்குமதி ஏற்றுமதித் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தினரின் பாரதி விழாவில் சிறப்புச் சொற்பொழி வாற்றுகையில் கூறினர்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஆ. சதாசிவம் தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையின் போது, "பாரதி தமிழர் சமுதாயத்தின் ஒளிவிளக்கு பழமையைச் சாடிய புதுமைக் கவிஞன்" என்று சொன்னர்.

'பாரதியின் பாதையிலே' என்ற தலைப்பில் திரு. இரா. சிவலிங்கம் பேசுகையில், "பட்டி தொட்டிகளிலும் விஞ்ஞான சாதனங்கள் மலிந்த பெரிய நகரங்களிலும்கூடப் பாரதிக்கு விழா எடுக்கிறர்கள். இருபதாம் நூற்றுண்டிலே தோன்றி, பொதுமக்கள் கவிஞனுக மாறிவிட்ட பெருமை பாரதியையேசாரும். பாரதியின் பாதையிலே இன்று பல இளைஞர்கள் அடியெடுத்துவைக்க ஆரம்பித்துள்ளார்கள். புதிய கவிஞர்கள் சமுதாயம்கூடத் தோன்றியுள்ளது எனலாம். தமிழினத்தின் சாபக்கேடுகளான சாதிக்கொடுமையையும், மூட வழக்கங்களையும் மண் மூடிப்போகவேண்டும் என்று மார்தட்டிப் பாடியவன் பாரதி. பாரதி வகுத்த பாதை தமிழர் சமூகத்தின் ஈடேற்றத்திற்கான பாதை. புதிய எழுச்சியும், புதிய உற்சாகமும் பொங்கிப் பொலிவதற்கான பாதை" என்று சொன்னர்.

'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் திருமதி மீனுட்சி பொன்னுத்துரை பேசுகையில், "பெண்களையும் இந்த நாட்டிலே சரிநிகர் சமானமாக வாழவேண்டும் என்று பாடிப் பெண்ணுரிமைக்காகக் குரல் எழுப்பிய புதுமைக் கவிஞன் பாரதி. பாரதி சொல்லியபடி நமது பெண்களும் நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும், திமிர்ந்த ஞானச்செருக்கும் கொண்டு மிளிரவேண்டும்" என்றர்.

'யார் இந்தப் பாரதி' என்ற தலைப்பில் வழக்கறிஞர் திரு. மு. திருநாவுக்கரசுவும் பேசினர்

கவிஞர் இ முருகையன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் இராஜபாரதி, சக்தி அ. பாலையா, சில்லையூர் செல்வராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சங்கீதபூஷணம் திரு எம். ஏ. குலசீலநாதனின் இன்னிசைக் கச்சேரியைத் தொடர்ந்து சைவமங்கையர் கழக மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ஆரம்பத்தில் மன்றத் தலைவர் திரு த. சிவசம்பு வரவேற்புரை நிகழ்த்திஞர். திரு. செ. சிவலோகநாதன் நன்றியுரை கூறினர்.

## அஞ்சல் திணைக்கள தமிழ் ஊழியர்முயற்சி

வெள்ளவத்தை, வியா.

அஞ்சல் திணைக்களத்தில் கடமையாற்றும் சகல தமிழ் எழுதுவினைஞர்களையும், தபாலதிபர்களையும் சேர்த்துத் 'தமிழ் இலக்கிய மன்றம்' ஒன்றினை உருவாக்கும் பணியில் தலைமை அஞ்சலக காசுக் கணக்கீட்டுக்கிளையைச் சேர்ந்த திரு க. பேரம்பலம் (நெல்லை க. பேரன்) முயற்சி எடுத்துள்ளார். தற்போது புதிதாகச் சேவைக்கு வந்துள்ள தமிழ் ஊழியர்கள் அனைவரும் இதற்குத் தக்க ஆதரவு தெரிவித்துள்ளனர். இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதும் 1970-ம் ஆண்டில் 'மாபெரும் முத்தமிழ் மகாநாடு' ஒன்றை நடாத்த இப்பொழுதிருந்தே முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

## பாலம் வேலைக்கு ஆவன செய்யப்படும்

யாழ்ப்பாணம், சனி

எழுவைதீவுப் பகுதிக்கான பிறப்பு இறப்பு பதிவுகாரர் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சையை நடாத்துவதற்கு எழுவைதீவுக்குச் சென்றிருந்த யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு சா ரெத்தினம், வட பெரும் பகுதி பதிவுகாரர் ஆகியோர் கிராமசபைக்கும் விஜயம் செய்து கிராமசபைத்தலைவர் திரு. சிவசம்புவுடன் பேசினர் துறைமுகப்பால வேலையைத் துரிதப் படுத்து

காவேரி நீர் தகராறு

# மத்திய அரசு தமிழகத்தின் உரிமைகளை கவனிக்கும்

சென்னை, செப். 12

தமிழ்நாடு அரசின் சம்மதத்தைக் கேளாமல் மைசூர் அரசாங்கம் காவேரி ஆற்றில் தன்னிச்சையாக அணைத்திட்டங்களை நிறைவேற்ற தீர்மானித்திருப்பதனுல் ஏற்பட்டிருக்கிற நிலைமையை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியும் பாசன மின்சக்தி அமைச்சர் திரு. கே. எல். ராவும் நன்கு உணர்ந்திருப்பதாகவும் இந்த விஷயத்தைக் காவேரி ஆற்றுநீர்சம்பந்தமாக மைசூர் அரசு எடுக்கவிருக்கும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் குறித்து மத்திய அரசிடம் எடுத்துரைப்பதற்காக திரு. சாதிக்பாச்சா அண்மையில் டில்லிக்குப் போய்இருந்தார்.

பிரதம மந்திரியுடனும் பாசன அமைச்சரோடும் பேச்சுக்கள் நடத்தினேன். காவேரியின் எந்த அணைத் திட்டத்தை மைசூர் நிறை... பந்தங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளஎந்தத்திட்டத்தை மைசூர் நிறைவேற்றுவதாக இருந்தாலும் தமிழ்நாடு ஆட்சேபனைசெய்யாது என்று தாம் தெளிவுபடுத்தியதாகவும் இந்த ஒப்பந்தங்களின் படி தமிழ்நாட்டுக்கு காவேரியில் இவ்வளவு அணைக்கட்டுகளுக்கு இவ்வளவு நீரை மைசூர் விடவேண்டும்என்று வகை செய்யப்பட்டுள்ளது இந்த ஒப்பந்தங்களுக்கு மா...

கண்ணுடித் தொழிற்சாலைத் திட்டம்

# அரசாங்கத்தால் முடியாவிட்டால் தனியாரிடம் ஒப்படைக்கலாமே?

## உடுவில் எம். பி. வற்புறுத்தல்

கொழும்பு, வெள்ளி

"பருத்தித்துறைப் பகுதியில் உள்ள மணல் கண்ணுடிப் பொருள்கள் உற்பத்தி ... சிறந்... விஞ்ஞா... களும் வெளிநாட்டு நிபுணர் ... மான்யம் பரிசீலனை செய்... படுகையில் நடந்த விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. தர்மலிங்கம் பேசுகையில், 1956-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசாங்... செய்ய முடியாதென உலக வங்கி நிபுணர்களும் ஆங்கில அரசின் நிபுணர்களும் யோசனை தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்த முயற்சி கைவிடப்பட்டது. இதேபோல் நெசவு ஆலை... றனர். இங்கு இப்படி கைத்தொழில்துறை வரையறை செய்யப்படாததால் தனியார்துறையினர் எதிலும் இறங்குவதற்கு தயங்குகின்றனர்.

'ஸ்கிறீன் பிறின்டிங்' அச்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்களை நிறைவேற்ற தீர்மானித்திருப்பதனால் ஏற்பட்டிருக்கிற நிலைமையை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியும் பாசன மின்சக்தி அமைச்சர் திரு. கே. எல். ராவும் நன்கு உணர்ந்திருப்பதாகவும் இந்த விஷயத்தைக் கவனித்து ஆவன செய்வதாக பிரதமர் உறுதி கூறியிருப்பதாகவும் தமிழ்நாடு பொதுப்பணித்துறைஅமைச்சர் சாதிக்பாச்சா நிருபர்களிடம் கூறினர்.

துரைப்பதற்காக திரு. சாதிக்பாச்சா அண்மையில் டில்லிக்குப் போய்இருந்தார்.

பிரதம மந்திரியுடனும் பாசன அமைச்சரோடும் பேச்சுக்கள் நடத்தினேன். காவேரியின் எந்த அணைத் திட்டத்தை மைசூர் நிறைவேற்ற முற்பட்டதாலும் தமிழ்நாடு ஆட்சேபனை செய்யுமா என்று அவர்கள் கேட்டார்கள். 1892, 1924ஆகிய வருடங்களில் இரு ராஜ்யங்களுக்கிடையே ஏற்பட்ட ஒப் தாம் தெளிவுபடுத்தியதாகவும் இந்த ஒப்பந்தங்களின்படி தமிழ்நாட்டுக்கு காவேரியில் இவ்வளவு அணைக்கட்டுகளுக்கு இவ்வளவு நீரை மைசூர் விடவேண்டும்என்று வகை செய்யப்பட்டுள்ளது இந்த ஒப்பந்தங்களுக்கு முரணில்லாமல் மைசூர் காவேரி மீது புதுஅணைகளைக்கட்டுவதை தமிழ்நாடு அரசு எதிர்க்காது என்று தாம் கூறியதாகவும் திரு. சாதிக்பாச்சா கூறினர்.

# பிரதமர் இந்திரா தவறை ஒப்புக் கொள்ள வேண்டுமாம்

## மொரார்ஜி வற்புறுத்துகிறர்

சென்னை,. செப். 12

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தவறு செய்தவர்கள் தாங்கள் செய்ததுதான் சரி என்று கூறுகிற போக்கை மாற்றிக் கட்சியில் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் வரை தன்னுடையபோராட்டம் ஓயாது என்று முன்னுள் உதவிப் பிரதம மந்திரி மொரார்ஜி தேசாய் கூறினர்.

தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மொரார்ஜி தேசாய் பேசினர். அவர் மேலும் பேசுகையில், ராஷ்டிரபதி தேர்தலில் கட்சிக் கட்டளையைப் புறக்கணித்த பிரதம மந்திரியும், மற்றவர்களும் தங்கள் தவறுகளை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றூர்

தவறுகளையும், அநீதிகளையும் எதிர்த்துப் போராடும் பொழுது மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்காமல் தாங்களே துன்பங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது தான் காந்திஜியின் போதனை என்று கூறிய அவர், காந்திஜியின் வழி நின்று சமீபகால சம்பவங்களைக் காங்கிரஸ் காரர்கள் பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்றூர். காந்திய நெறியைக் கையாண்டு காங்கிரஸ் ஸ்தாபனத்தில் மீண்டும் கட்டுப்பாட்டை நிலைநிறுத்த வேண்டும் என்று காங்கிரஸ்ஊழியர்களை அவர் கேட்டுக் கொண்டார் இந்நெறியை விட்டு, கட்டுப்பாட்டைப்புறக் கணித்தவர்கள் கூறுகின்றவழிமுறைகளைக் கையாள முடியாது என்றும் அவர் சொன்னர். கட்சியில் ஒற்றுமையை நிலைநிறுத்துவதற்கு முன் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது தான் முக்கியம் என்றும் அவர் வற்புறுத்தினர்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பல சமயங்களில் கட்டுப்பாடு மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைக் சுட்டிக் காட்டிய மொரார்ஜி இதற்கு முன் நடந்த ஒழுங்கீனங்களைக் காட்டிலும் சில நாட்களுக்கு முன்நடந்த ஒழுங்கீனங்கள் மிகவும் கடுமையாகத் தண்டிக்கப்படத்தக்கதாகும் என்றூர்.

திரு. தேசாய் தொடர்ந்து பேசுகையில், பெங்களூர் அ. இ. கா க. கமிட்டி கூட்டத்திலும் டில்லி காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் நடந்த நிகழ்ச்சிகளை விவரித்தார். டில்லியில் ஒற்றுமை தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதை எடுத்துக் கூறிய அவர்கள், ஜனசங்கத்துடனும், சுதந்திரக் கட்சியுடனும், காங்கிரஸ் அக்கிராசனர் நடத்திய பேச்சுவார்த்தை தவறுன செயல் என்பதும் அத்தீர்மானங்களில் ஒன்ருகும் என்றூர்.

இந்தப் பேச்சுவார்த்தை தவருன செயல் என்ற காரணத்திற்காகவே சுதந்திர வோட்டுரிமை கேட்டவர்கள், அந்தப்பேச்சுவார்த்தை தவறு அல்ல என்று தீர்மானமான பின்னரும் தங்கள் செயலுக்காகவருத்தம் தெரிவிக்க மறுக்கிருர்களே என்றூர்.

கொழும்பு, வெள்ளி

"பருத்தித்துறைப் பகுதியில் உள்ள மணல் கண்ணுடிப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு மிகச் சிறந்ததென விஞ்ஞானிகளும் வெளிநாட்டு நிபுணர்களும் தெரிவித்திருக்கின்றனர். இங்கு ஒரு கண்ணுடித் தொழிற்சாலையை ஆரம்பிக்கும்படி அரசாங்கத்தை நாங்கள் பல தடவைகளிலும் கேட்டு வந்தோம். அரசாங்கத்திடம் பணம் இல்லாதிருக்கலாம். திரு. வி. வி. இராமசாமிப்பிள்ளை என்ற ஒருவர் தனிப்பட்ட முறையில் அங்கு கண்ணுடித் தொழிற்சாலை அமைப்பதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரினர். நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமும் அங்கு கண்ணுடித் தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரியது. இதுவரை யாருக்கும் அனுமதி கிடைக்கவில்லை அரசாங்கமும் கண்ணுடித் தொழிற்சாலையை அங்கு அமைக்கும் உத்தேசம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தினல் முடியவில்லையானல் தனியாரோ அல்லது கூட்டுறவுச்சங்கமோ இதை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கலாமே."

இவ்வாறு உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சின் மீதான மான்யம் பரிசீலனை செய்யப்படுகையில் நடந்த விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. தர்மலிங்கம் பேசுகையில், 1956-ம் ஆண்டுக்கு முன்னர் இருந்த அரசாங்கம் கைத்தொழில் திட்டங்களுக்கு இடமளிக்கவில்லையென்றும் 1956-ம் ஆண்டின் பின்னர்தான் கைத்தொழில் திட்டங்களுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டதென்றும் கூறினர். 1956-ம் ஆண்டுக்கு முன்னர் கைத்தொழில் திட்டவட்டமில்லாமல் அங்கொன்றும்இங்கொன்றுமாக அமைக்கப்பட்டதால்தான் இன்றும் அந்த நிறுவனங்கள் சீராக நடைபெற முடியாமலிருக்கிறதென்று உடுவில் பிரதிநிதி கூறினர். காகிதத்தொழிற் சாலையை எங்கேஅமைப்பது, பரந்தன் தொழிற்சாலையில் எவற்றை உற்பத்திசெய்வது போன்ற திட்டம் எதுவும் இல்லாமல் இவை மேற்கொள்ளப்பட்டன என்று அவர் சொன்னர்.

ஒரு எம். பி: அப்போது திருந்தகைத்தொழில் அமைச்சர்யார்?

தர்மலிங்கம்: ஜி. ஜி. பொன்னம்பலம்

உடுவில் பிரதிநிதி மேலும் குறிப்பிட்டதாவது:

ஓர் ஒழுங்கான திட்டம் இல்லாமல தொடங்கப்பட்டதால்தான் இன்றும் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை நட்டமடைந்துகொண்டிருக்கிறது. அது 'கோஷ்டிக் சோடா' வைமட்டுமே உற்பத்திசெய்துவந்தது. 'குளோரின்' இப்பொழுதுதான் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு முன் பரந்தன் பகுதியில் நச்சைப்பரப்பியதைத்தவிர குளோரின் பயன்படவில்லை.

1956-ம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியிலிருந்தஅரசாங்கங்கள் உலகவங்கியினதும் ஆங்கில அரசினதும், உபதேசத்தைக் கேட்டு வந்ததனல் தான் இங்கு தொழிற்சாலைகளை தொடங்க முடியாதுபோய்விட்டது. ரயர் உற்பத்தித் தொழிற்சாலையொன்று இங்கு ஆரம்பிக்கப்படவேண்டுமென்று முன்னர் முயற்சி செய்தபொழுது 'டன்லப்' கம்பனியின் ஒத்துழைப்பு இல்லாமல்இதைச் செய்ய முடியாதென உலக வங்கி நிபுணர்களும் ஆங்கில அரசின் நிபுணர்களும் யோசனை தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து இந்த முயற்சி கைவிடப்பட்டது. இதேபோல் நெசவு ஆலையொன்றை அமைப்பதற்கு என 230 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நெசவாலை நிறுவுவதானல் முதலில் இங்கு பருத்தி உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று உலக வங்கி ஆலோசனை கூறியதைத் தொடர்ந்து அப்போது நெசவாலை அமைக்கும் திட்டமும் கைவிடப்பட்டது.

உரத் தொழிற்சாலையொன்று இங்கு அமைக்கப்பட வேண்டுமென்று அப்மன் போதிருந்த கைத்தொழில் அமைச்சரிடம் வற்புறுத்தப்பட்டது. உரத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஆறு ஏழு கோடி ரூபாய் வேண்டும் அதற்கு நான் எங்கே போவேன் என்று கையை விரித்தார். ஆனல் அதே ஆண்டில் செயற்கைப்பட்டு இறக்குமதிக்கு 50 லட்சம் ரூபாயும் அத்தர் புனுகு போன்ற வாசனைத் திரவியங்களுக்கு 350 லட்சம் ரூபாயும் மற்றும் ஆடம்பரப் பொருள்களின் இறக்குமதிக்கு 100 லட்சம்ரூபாயும் ஒதுக்கப்பட்டது. 1949-ம் ஆண்டுக்குப் 1952 ஆண்டுக்கும் இடைப்பட்டகாலத்தில் தொடங்க உத்தேசித்து கைவிடப்பட்ட தொழிற்சாலைகள் 1956-ம் ஆண்டுக்குப்பின்னர் சோஷலிச நாடுகள் உதவ முன்வந்ததால் இன்று உருப்பெற்றுள்ளன. உருக்கு ஆலை, றயர்த் தொழிற்சாலை மட்டுமல்லாது பல நெசவாலைகளும் தொடங்கப்பட்டு செயற்படுகின்றன. இன்று கைத்தொழில் சீரான பாதையில் வந்துள்ளது.

ஆனுலும் கைத்தொழிலில் திட்டவட்டமானகொள்கை இன்னும் ஏற்படவில்லை. தனியார் என்னென்ன கைத்தொழில்களை ஆரம்பித்து நடத்தலாம், அரசாங்கம் என்னென்ன கைத்தொழில்களை மேற்கொள்ளலாம் என்பதுபற்றி ஒரு வரையறை செய்யப்படவில்லை. இந்தியாவில் இப்படி வரையறைசெய்யப்பட்டிருக்கிறது. அங்கு அமைச்சர் மட்டும் இதைச் செய்யவில்லை. ஆட்சிமன்றமே சட்டரீதியாக கைத்தொழிலுக்கு வரையறை செய்திருக்கிறது. ஒரு துறையை தேசியமயமாக்குவதற்கும் கூட அங்கு சட்டரீதியாக முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இதனல் தனியார் துறையினர் துணிவுடன் தயக்கமின்றி புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கின்றனர். இங்கு இப்படி கைத்தொழில்துறை வரையறை செய்யப்படாததால் தனியார்துறையினர் எதிலும் இறங்குவதற்கு தயங்குகின்றனர்.

'ஸ்கிறீன் பிரின்டிங்' அச்சடிச்சேலை ஆகிய 'அச்சடி' கைத்தொழிலில் 48 ஸ்தாபனங்களும 120 கிராமமுன்னேற்றச் சங்கங்களும் ஈடுபட்டுள்ளன. இவைகளுக்கு அனுமதியும் வழங்கபபட்டது பலர் இத்தொழிலைச் செய்துவருகின்றனர். இப்பொழுது 'சலுசல' என்ற வர்த்தக ஸ்தாபனம் 'ஸ்கிறீன் பிரின்டிங்' என்ற இந்த சேலை அச்சடிக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரியுள்ளது. இதற்கு சம்பந்தப்பட்ட ஓர் அமைச்சர் அனுமதி வழங்கிவிட்டார் கைத்தொழில் அமைச்சரின் அனுமதிதான் இனித் தேவை. கைத்தொழில் அமைச்சர் அனுமதிகொடுத்துவிட்டால் 48 தனியார் துறையினரும் 120 கிராம முன்னேற்றச்சங்கங்களும் தங்கள் தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இத்தொழிலில்ஈடுபட்டுள்ள பலரும் வேலையை இழக்கநேரிடும். எனவே அச்சடி கைத்தொழிலை ஆரம்பிக்க 'சலுசலா'வுக்கு அனுமதி வழங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவதில் என்ன விதமான கொள்கை பின்பற்றப் படுகிறது? கைத்தொழில் ஆரம்பிப்பதற்கு அனுமதி கோரி செய்யப்படும் விண்ணப்பம் மறுக்கப்படுவதற்கு காரணம் கூறப்படுவதில்லை, அனுமதி மறுக்கப்பட்டால் அதை எதிர்த்து 'அப்பீல்' செய்வதற்கும் வசதி கிடையாது. இதனல் அமைச்சர் மீதும் அரசாங்கத்தின் மீதும் வீணை சந்தேகம் கொள்ள நேரிடுகிறது. அரசியல் அடிப்படையில் விண்ணப்பங்கள் மறுக்கப்படுகின்றனவா, இன அடிப்படையில் மறுக்கப் படுகின்றனவா கொள்கை அடிப்படையில் மறுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

பருத்தித்துறைப் பகுதியில் நல்ல தரமான, சிறந்த கண்ணுடிப் பொருள்கள் உற்பத்தி செய்வதற்கான மணல் இருப்பதாக விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளரும் தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து அங்கு கண்ணுடித் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வி. வி. இராமசாமிப்பிள்ளை என்பவரும், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர். இதற்குஇன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. ஏன் அனுமதி அளிக்கப்படவில்லை. தனியாரோ, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரோ கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவதில்லையென்பது அரசாங்கத்தின் கொள்கையானல் அரசாங்கமே இத்தொழிற்சாலையை நிறுவ வேண்டும். அரசாங்கத்திடம் பணவசதியில்லையெனில் தனியார் அல்லது கூட்டுறவுத் துறையினர் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

அச்சுவேலியில் கைத்தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்படுமென்று சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. வட மாகாண மக்களின் எதிர்காலம் இனிக் கைத்தொழிலில்தான் தங்கியிருக்கிறது. அரசாங்க உத்தியோகத்தை இனி நம்பியிருக்கமுடியாது விவசாயம், செய்வதற்கும் வசதியில்லை. எனவே சிறு சிறு தொழில்களைச் செய்வதற்கு ஊக்கமளிப்பதற்கு கைத்தொழிற் பேட்டைகள் பல தொடங்கப்படவேண்டும். இதற்கு முதற்படியாக அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை விரைவில் ஆரம்பிக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# வாழ்க்கை வசதியற்ற தொழிலாளர் வழிதேட முயற்சிப்பது குற்றமா?

## திரு. அண்ணமலை கேள்வி

கொழும்பு, வெள்ளி

இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் தொழிலாளர் இலங்கையிலுள்ள தோட்டங்களில் பங்கு வாங்கியிருக்க முடியுமானல் இலங்கையில் பிரிட்டிஷ்காரருக்குச் சொந்தத் தோட்டங்களிருக்க முடியுமானல் இலங்கையில்வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், நாடற்றவர்கள் தோட்டங்களை வாங்கக் கூடாதா, அவற்றிற்கு உரிமையாளர்களாக இருக்கக் கூடாதா, தோட்டங்களில் பங்கு வாங்கக் கூடாதா?

இவ்வாறு நியமனப் பிரதிநிதியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான திரு. வி. அண்ணமலை மக்கள் பிரதிநிதிகள் சபையில் வர்த்தக அமைச்சுமீதான மான்யம் பரிசீலனை செய்யப்படுகையில் பேசுகையில் கேட்டார்.

திவுலுப்பிட்டியப் பிரதிநிதி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி மக்கள் பிரதிநிதிகள் சபையில் கைத் தொழில் அமைச்சின் மான்யம்மீது விவாதம் நடைபெறுகையில் பேசும்போது இ தொ கா என்ற கம்பனிபற்றி விசாரணை செய்யப்பட வேண்டுமென்றும் இக்கம்பனியில் தொண்டமானும் தோட்டத் தொழிலாளரும் பங்கு போட்டுள்ளதாகவும் கூறியதைக் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே திரு. அண்ணமலை மேற்கண்டவாறு கேட்டார்

இ தொ கா பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியென்றும் கம்பனியாக அதைத் தொடங்காமல் கூட்டுறவு அடிப்படையில் அதை ஆரம்பிக்கவே உத்தேசிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனல் நாடற்றவர்கள் என்ற காரணத்தினல் கூட்டுறவுச்சட்டம் அதற்கு இடம்கொடுக்கவில்லையென்றும் தெரிந்ததால் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டது என்றும் திரு. அண்ணமலை கூறினர்.

நாடற்ற, வாழ்க்கை வசதியற்ற தொழிலாளர் தமது வாழ்க்கைக்கு வழி தேட முயற்சி செய்வது குற்றமா தவறு என்றும் அவர் கேட்டார். கொத்மலை, வலப்பனை, கொலப்பத்தனை ஆகிய இடங்களில் வெள்ளைக்காரருக்குச் சொந்தமான தோட்டங்களிருக்கின்றன என்று கூறிய திரு. அண்ணமலை, அவர்களுக்குச் சொந்தத்தில் தோட்டங்களிருப்பதையும் பிரிட்டிஷ் தொழிலாளருக்கு இங்குள்ள தோட்டங்களில் பங்குஇருப்பதையும் பற்றிக் கவலைப்படாதவர்கள், இங்குள்ள இங்கு வாழ்ந்து இந்நாட்டின் பொருளாதார விருத்திக்கு உழைத்துவரும் தொழிலாளர் ஒரு கம்பனியில் பங்கு வாங்கியிருப்பதுதான் குற்றமாகத் தெரிகிறதா என்றும் கேட்டார்.

சமத்துவம், சமூகநீதி, தேசிய ஐக்கியம் என்றெல்லாம் பேசுபவர்கள் இனியும் இப்படி வகுப்புவாத அடிமை மனப்பான்மையை விடுத்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். திவுலப்பிட்டியாப் பிரதிநிதியை முதலாளித்துவத்தின்சிறந்த பிரதிநிதி என அவர் வர்ணித்தார்.

அரசாங்க அதிபர் திரு ச ா ரெத்தினம், வட பெரும் பகுதி பதிவுகாரர் ஆகியோர் கிராமசபைக்கும் விஜயம் செய்து கிராமசபைத்தலைவர் திரு. சிவசம்புவுடன் பேசினர் துறைமுகப்பால வேலையைத்துரிதப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மேலதிக அரசாங்க அதிபர் கி.ச தலைவருக்கு உறுதி அளித்தார்.

— —

## பாரதிவிழா

மல்லாகம், வெள்ளி

காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினரின் பாரதி விழா இம்மாதம்17ம் திகதி நடேஸ்வராக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடைபெற விருக்கின்றது. பிரதம பேச்சாளராக தமிழக அறிஞர்இராகவன் கலந்துகொள்வார். விசேஷ அம்சமாக பட்டிமன்றம் நிகழ்ச்சிஇடம் பெறும்.

0 0 0

உடுத்திரபுரம், வெள்ளி

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில்இம்மாதம் 21ம் 22ந் திகதிகளில் பாரதிவிழாவும் சர்வமகாநாடும் நடைபெறவிருக்கிறது. அத்தினங்களில் கருத்தரங்கு, சொற்பொழிவுகள் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மனச் சாட்சியின் குரலே ஆண்டவனின் குரலாகும் ஒவ்வொரு செய்கை, எண்ணம் ஆகியவை சரியான வையா என்று அறுதித் தீர்ப்பு வழங்குவது அது தான்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 2-8ந் திகதி (13 - 9 - 69)


## வரவேற்கத்தக்க சந்திப்பு

சற்றும் எதிர்பாராத முறையில் நாலரை ஆண்டுகளுக்குப் பின் ரஷ்யாவின் பிரதமரான கோஸிஜினும், புதுசீனத்தின் பிரதமர் சூ-என் லாயும் பீகிங் விமான நிலையத்தில் சந்தித்துள்ளனர். இதன் நோக்கமோ, அவர்கள் பேசிய விவரமோ தெரியவில்லை. இது எப்படி இருப்பினும் இவ்விரு பெரிய கம்யூனிஸ வல்லரசுகளின் பிரதமர்கள் நேரில் சந்தித்துப் பேசியது, சர்வதேச அரசியலில் வரவேற்கத்தக்கதோர் சம்பவமாகும்.

ரஷ்ய பிரதமரை சந்திக்க விரும்பாததாலேயே சீனப் பிரதமர் தமது கோஷ்டியுடன் ஹனோயிலிருந்து அவசரமாக பீகிங்குக்குத் திரும்பி விட்டாரென்று பலபல வதந்திகள் அடிபட்டன. இவ்விரு கம்யூனிஸ நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை மிகைப்படுத்தி இரண்டும் மோதிக்கொள்ள வேண்டுமென்று விரும்புபவர்களுக்கு, இவ்விரு தலைவர்களும் பீகிங்கில் சந்தித்துள்ளது பெரிய இடி விழுந்ததுபோல் இருக்கும். ஆனலும் இவ்விரு பெரிய வல்லரசுகளும் தங்கள் வேற்றுமைகளை சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு, நட்புடன் வாழ்ந்து ஒத்துழைக்க வேண்டுமெனபதே வியட்ணும் சுதந்திரவீரரான காலம் சென்ற ஹோசிமின்னின் மனப்பூர்வமான விருப்பம். அவ்வீரரின் மரணத்தை முன்னிட்டு, ரஷ்ய, சீன பிரதமர்களே நேரில் வந்ததிலிருந்து இவ்விரு நாடுகளுக்கும், ஹோ மீதுள்ள அபாரமான அன்பும் மதிப்பும் விளங்குகிறது.

ஹனோய்க்கு அஞ்சலி செலுத்த வந்த இருதேச பிரதமர்களும், அங்கு வட வியட்ணும் தலைவர்களுடன் கலந்து பேசியதின் பயனுக ஒரு விஷயத்தை நனகு உணர்ந்திருப்பர். அவ்விரு நாடுகளும் தங்கள் வேற்றுமைகளுக்கு ஒரு முற்றுப்

அங்கு சண்டை வருடக்கணக்காக நீடிப்பதற்குக் காரணம், அமெரிககா, ரஷ்யா, சீனம் இம்மூன்று வல்லரசுகளும் தான். அவை உதவி செய்வதை நிறுத்திக்கொண்டால், வியட்ணும் போர் சீக்கிரத்தில் நின்று, அந்நாட்டு மக்கள் அமைதியான முறையில் ஒரு தீர்வுகாணக்கூடும். அமெரிக்காவின் வியட்ணும் கொள்கையில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டுள்ளது. வியட்ணுமிலிருந்து தங்கள் இராணுவத்தைத் திருப்பி அழைப்பது பற்றி ஆலோசிக்க, தெற்கு வியட்ணுமிலுள்ள தமது இராணுவத் தளபதிகளை அழைத்து, ஜனதிபதி நிக்ஸன் முக்கிய மந்திராலோசனை நடத்துகின்ருர். தமது இராணுவத்தை மட்டும் வாபஸ் பெற்று, யுத்தத்தை 'வியட்ணும்மயமாக்க' (வியட்ணுமியரும் வியட்ணுமியரும் தொடர்ந்து அடித்துக்கொள்ள) அமெரிக்கா ஆயுதம் முதலிய உதவிகளை அளித்து அங்கு யுத்தத்தியை வளர்ப்பதாயின், அதையும் அமெரிக்க பொது மக்கள் உள்ளிட்டு உலகிலே சமாதானப்பிரியர்கள் யாரும் ஆதரிக்கமாட்டார்கள்.

வியட்ணும் உள்நாட்டுச் சண்டையிலே வெகுதூரத்திலுள்ள அமெரிக்காவுக்கு என்ன வேலை? இரு வியட்ணும்களையும் இணையச்செய்வது பற்றித் தீர்மானிக்க, ஜெனிவாஒப்பந்தப்படி அங்கு பொதுத்தேர்தல் நடத்த அமெரிக்காவும் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கையில் அதை நிறைவேற்றி வைக்க அமெரிக்கா இனியும் மறுக்குமாயின் உலக நாடுகளுக்கு அதன் மீது நம்பிக்கையும் மதிப்பும் குறையும். ஏற்கனவே செய்துவிட்ட ஒரு பெரிய இமாலயத்தவறை நேர்செய்யவே அமெரிக்கா விரும்புவதாயின், வியட்ணுமின் இரு பகுதிகளையும் இணைப்பது பற்றிய நடவடிக்கையில் அது இனியும் குறுக்கே நிற்க முடியாது. இதே சமயம்

### ஆட்சி மன்றத்தில்

எஸ். எம். ஜி

# மனித உரிமைகள் சாஸனம் பற்றி பீலிக்ஸின் வியாக்கியானம்

''யார்மீது எப்படி வழக்குத் தொடருவதென்பதை இந்த அரசாங்கம், ஆட்சி மன்றக் குழுவில் தீர்மானிக்கிறது'' என்று தொம்பே பிரதிநிதி திரு. பீலிக்ஸ் ஆட்சிமன்றத்தில் கூறிய போது அரசாங்கத் தரப்பில் அப்போது அமர்ந்திருந்த அனைவரும் (ஒரே ஒருவரைத்தவிர, ''அப்படியில்லை, அப்படியில்லை'' என்று ஒன்று சேர்ந்து மறுப்புக் குரல் எழுப்பினுர்கள். வழக்குத் தொடருவது அட்டர்ணி ஜெனரலின் வேலை என்றும் ஒரு குரல் கூறியது.

பீலிக்ஸ் விடவில்லை. நான் விஷயம்தெரியாமல்சொல்லவில்லை. நீங்கள் ஏன் சும்மா மறுக்கிறீர்கள் என்று கேட்டார் அப்போதும் மறுப்புக் குரல் ஓயவில்லை.

''மக்கிரத்வத்தைக்கு எதிராக வழக்குத் தொடருவது என்று எங்கே தீர்மானிக்கப்பட்டது?'' கேள்வி கேட்ட பீலிக்ஸே பதிலையும் சொன்னுர். ''அரசாங்கக் கட்சிக்குழுக்கூட்டத்தில் தான் தீர்மானிக்கப்பட்டது'' இதற்கும்; ''இல்லை இல்லை'' என்று பதில் வந்தது. ''ஏன் இல்லை என்று சொல்லுகிறீர்கள் உங்கள் அமைச்சரை, ராஜாங்க அமைச்சரையே கேளுங்கள்'' என்று கணையைத் திருப்பி விட்டார். அத்துடன் நிற்கவில்லை; ''அரசாங்கக் கட்சிக் குழுக்கூட்டத்தில் தான் மக்கிரத்வத்தை மீது வழக்குத் தொடருவது எனத் தீர்மானிக்கவில்லை ''என்று ராஜாங்க அமைச்சர் மறுக்கட்டும் பார்ப்போம்'' என்று பீலிக்ஸ் சவாலும் விட்டார் எல்லோரும் மறுப்புக்குரல் எழுப்பியபோது மௌனமாக அமைதியாக இருந்த ஒரேயொரு பிரதிநிதியான ராஜாங்க அமைச்சர் புன்சிரிப்பை உதிர்த்தார். அரசாங்கத்தரப்பினர் பெட்டிப்பாம்பாகி விட்டனர்.

முதல் அடியே சரியாக விழுந்து விட்டதால் புதிய தெம்புடன் பீலிக்ஸ் அடுத்தடுத்து கணைகளைக் தொடுத்தார்.

ஐ நா மனித உரிமை சாஸனத்தை இலங்கையும் ஒப்புக் கொண்டிருக்கிறது;

என்று நான் பட்டியல்தயாரித்துத்தர முடியும்ஆனுலும் நான் பொதுப்படையாகச் சொன்னதை ஆராய்து நடவடிக்கை எடுக்கவேண்டியது நீதியமைசசின்வேலை என்று தொம்பேப்பிரதிநிதி குளியாப்பிட்டி நீதி மன்றத்தில் நடந்த ஒரு வழக்கை உதாரணமாகஎடுத்துக் கூறினுர் கட்டடங்களைப்பழுது பார்ப்பதும் நீதி பரிபாலன சேவையிலுள்ளவர்களின் இடமாற்றம் ஜே. பி. க்கள் நியமனம் ஆகியவைமட்டும் தான் நீதியமைச்சின் வேலையல்லவென்றும் அடித்துக் கூறினுர். அமைச்சர் ஒருவர் மீது லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுச் சுமத்தப்பட்டது பற்றியும் குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரமில்லையென்று லஞ்ச விசாரணைக் கமிஷனர் தெரிவித்து எழுதிய கடிதத்தை பிரதமர் சபையில் சமர்ப்பித்ததுமற்றியும் குறிப்பிட்ட பீலிக்ஸ், சபாநாயகருக்குத் தெரிவிக்காமல் சபை அங்கத்தவர் ஒருவர் சம்பந்தமாக லஞ்ச விசாரணைக் கமிஷனருக்கு பிரதமர் அறிவித்தது முறையற்ற செயல் என்று வாதாடியதுடன் விசாரணையில்லாமலே குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டதாக லஞ்ச விசாரணைக் கமிஷனரிடமிருந்து சேர்ட்டிபிக்கட் வாங்கி விட்டால் போதுமா? என்று கேட்டார். ஜீவனும்ச வழக்குகள் பற்றிக் குறிப்பிட்ட பீலிக்ஸ் நீதிமன்றத்தில் தனக்குரிய ஜீவனும்சப் பணத்தைப் பெறுவதற்காக நாட்டுப் புறத்திலிருந்து நான்கு பிள்ளைகளுடனும் பத்துமைல் தூரத்துக்கப்பாலுள்ள நீதிமன்றத்துக்குவரும் ஒரு பெண் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்களை எடுத்துக காட்டி 30 ரூபாய் ஜீவனும்சம் கிடைககும் அந்தப் பெண்ணுக்கு கணவன் 10ரூபாய் தான் தன்னிடம் இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவித்து மிகுதியை மற்றொரு ...தியில் கட்ட நீதிபதியும் அனுமதித்தால் அந்தப் பத்துரூபாய் அந்தப் பெண்ணின் அன்றைய செலவுக்கே போதுமா? என்று கேட்டார். ஜீவனும்ச... ...ணத்தை விட்டிலிருந்த...

வர் மனைவியுடன் சண்டையிட்டுப் பிரிந்து வாழ்வதுடன் மனைவிக்கு மாதா மாதம் 25 ரூபாய் ஜீவனும்சம் கட்டிவந்தவர் என்று கூறினுர். இப்போது அவர் சமாதான சபையின் தலைவராக இல்லையென்றும் ஆனுல் அந்தச் சபையின் தற்போதைய தலைவரும் சமாதானத்தில் ஆர்வமில்லாதவர் என்ருர். உறவினர்களையும் வேண்டியவர்களையும் சமாதான சபைகளுக்கு நியமிப்பதை விடுத்து, சமாதானத்தில் விருப்பமுள்ளவர்களையும், வழக்குகளில் சம்பந்தப்பட்டிராத ஒழுக்கமும் நேர்மையும் உள்ளவர்களை நியமியுங்கள் என்று கேட்டுக்கொண்ட திருமதி சிறிமா ''எனது ஆட்களை நியமிக்கும்படி நான் கேட்கவில்லை. யு. என். பி யிலேயே நல்லவர்கள்இருக்கிருர்கள். அவர்களை நியமிக்கலாம்'' என்று குறிப்பிட்டுவிட்டு, ''எனது தொகுதியில் உங்கள் ஆட்கள் குறைவு என்பது எனக்குத் தெரியும்'' என்று புன்சிரிப்புடன் கிண்டலும் செய்தார்.

கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கதிரவேலுப்பிள்ளை சமாதான சபைகள் பற்றி திருமதி சிறிமா கூறிய கருத்தை முழுதும் ஒப்புக்கொள்ளவில்லை. சில இடங்களில் சமாதான சபை சரியகக அமையவில்லையானுலும் பல இடங்களிலும் இச் சபைகள் நல்லசேவை செய்துவருவதாகவும் கிராம நீதிமன்றங்களுக்கே வேலையில்லாமல்போகும்நிலை இச் சபைகளின் நல்ல பணிகளினுல் ஏற்பட்டுள்ளதென்றும் சொன்னுர்.

### லஞ்ச ஊழல்

ஹபரதுவப் பிரதிநிதி திரு. பிரின்ஸ் குணசேகரா தமது பேச்சில் லஞ்ச ஊழல்பற்றி பெரிதும் குறிப்பிட்டார் அரசாங்கத் தரப்பைச் சுட்டிக்காட்டி அங்கு லஞ்சமும் ஊழலும் நிறைந்திருக்கிறதென்ருர். ஆட்சிமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்குள்ள விசேஷ சலுகையும் பாதுகாப்பும் நீக்கப்படவேண்டுமென்றும் இந்தச் சலுகையும் விசேஷ பாதுகாப்பும் நீக்கப்பட்டுவிட்டால் லஞ்...

மூலம் இந்தச்சபையில் அங்கத்தவராக வரமுடியும் என்ருர். பண்டாரகம தேர்தல் வழக்கில் சுப்ரீம்கோர்ட் அளித்ததீர்ப்பையே அவர் இதற்கு உதாரணமாகவைத்துப்பேசினுர். நீதிமன்றத்திலும், பண்டாரகம தேர்தல்வழக்கில் தீர்ப்பளித்த நீதியரசர் மீதும் தாம் கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்திருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டதுபற்றியும் அவர்குறிப்பிட்டார். இந்தச்சந்தர்ப்பத்தில் தமது பிரேரணைகளைச் சபையில் வாசித்துக் காட்டியதுடன் நிராகரித்து சபைச் செயலாளர் எழுதிய கடிதத்தையும் வாசித்தார்.

### சிங்களத்தில் அலுவல்கள்

சிறிமா அரசாங்கத்தின் முதல் கல்வி அமைச்சராக இருந்த பி. பி ஜி. கலுகல்ல கிராம நீதிமன்ற முதல் சுப்ரீம் கோர்ட் வரை சகல நீதிமன்றங்களிலும்சிங்களத்தில் அலுவல்களைச் செய்ய முடியாதா என்று கேட்டுவிட்டு நீதிமன்றங்களில் எப்பொழுது தொடக்கம் சிங்களத்தில் அலுவல்கள் நடைபெறுமென்றும் நீதிமன்றங்களில் சிங்களத்தைப் புகுத்துவதில்லையென்பது தான் அரசாங்கத்தின் கொள்கையா? என்றும் கேட்டார். சிங்களத்தில் நீதிமன்ற அலுவல்கள் நடைபெறவேண்டுமென்பதை அவர் தமது நீண்டநேரப்பேச்சில் வலியுறுத்தினுர். இந்த நாட்டில் மூன்று பிரிவான வழக்கறிஞர்களிருப்பதாகக் குறிப்பிட்டகலுகல்ல வழக்கறிஞர்கள் பெருந்தொகைப்பணம் பெறுவதாகக் கூறியதுடன் ஒருவழக்கில் தாமே ஆயிரம் ரூபாய் ஒருவழக்கறிஞருக்குக் கொடுத்தஅனுபவத்தை எடுத்துச் சொன்னுர். வழக்கறிஞர்களின் கட்டணம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் வாங்கக் கூடாதென்று கட்டுப்படுத்த வேண்டுமென்றும்கூறியதிரு. கலுகல்ல குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகவாங்கும் வழக்கறிஞர்கள் தொடர்ந்து தொழில் புரிவ...

# ஐயாறன் எழுதுவது

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலே நல்ல மழை, இரண்டு மணி நேரத்துக்கு மேல் பெய்த அம்மழையை 'பொன்மழை' என்கிருர் ஒரு கமக்கார அன்பர். பயிர்பச்சைகளுக்கு இது மிக நல்லது. சில இடங்களில் வயல்களை உழுது விதை விதைக்கவும் இந்த மழை உதவி செய்துள்ளது.

சில நாட்களாக கடும் வெயிலால் வாடிக் கிடந்த செடி கொடிகளெல்லாம் பச்சை பசேலென்று பசுமையாகப் பொலிவது கண்ணுக்கு மிகக் குளிர்ச்சியாகவுள்ளது.

காலாகாலத்திலே இப்படி வான்முகில் பொழிந்ததற்கு நாம் எவ்விதம் நன்றி செலுத்த முடியும்? தொடர்ந்து நமக்கு இவ்விதமே தேவையானபோது மழை பொழிய நாம் என்ன செய்ய வேண்டும்?

0 0 0

சென்னைப் பத்திரிகை ஒன்றைப் பார்த்தேன். அங்கு தெருவில் வைத்துள்ள குழாயில் வாயை வைத்து, சில சொட்டுத் தண்ணீருக்காக ஒரு வாலிபர் உறுஞ்சுகிருர். பாவம்!

இரண்டாண்டுகளாக அங்கு மழை இல்லையாம். பெய்தால் பேய் மழையாகப் பெய்து வெள்ளம்வந்து அழிக்கிறது. இல்லாவிட்டால் மழையே இல்லாமல் குடிதண்ணீருக்கும் பஞ்சமேற்படுகிறது.

மழை பெய்வதற்கும் பெய்யாததற்கும் ஏதும்விதிமுறை உண்டா? பெய்யெனப் பெய்யும் மழை என்ருர் திருவள்ளுவர். தெய்வம் தொழாது கொழுநனைத் தொழுதொழுவாள் சென்னையில் யாருமில்லையா?

0 0 0

ஈழத்தின் சர்வோதய

### நான்கு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருணேதயாக்கல்லூரி தற்போது செய்த சேவையிலும் பார்க்க இன்னும் நல்ல சேவையாற்றவேண்டும். நல்ல சேவை செய்வதற்கு பாடசாலை தரம் உயர்த்தப்படவேண்டும் மிகவிரைவில் இப்பாடசாலை தரம் உயர்த்தப்பட்டு அளவெட்டிச் சுற்றுடல் மாணவர்களுக்கு அரிய தொண்டு புரிய வேண்டும் என்ருர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில வித்தியாதிகாரி திரு எஸ் தணிகாசலம் பேசுகையில், ...

சிரமதானத் தலைவரான ஏ. டி. ஆரியரத்னவுக்கு சமூகசேவைக்கான 10000 டாலர் மாக்ஸேஸே (பிலிப்பைன்ஸ்) பரிசு கிடைத்திருப்பது இலங்கைப் பிரதமர் டட்லி கூறியுள்ளது போல் அவருக்கு மட்டுமன்றி இலங்கைக்கே பெருமை அளிப்பதாகும்.

ஆசிரியரான ஆரியரத்ன ஓர் ஆசிரியர். பணக்காரரல்லர் குடும்பஸ்தர். என்றுலும் தமக்குக் கிடைத்த இந்தப் பரிசை ஈழத்து சிரமதான இயக்கத்துக்கே நன்கொடையாகக் கொடுத்துவிட்டது. அவரது பெருமையை மேலும் உயர்த்துவதாகவுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன் ஆரியரத்ன அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கையில், வட மாகாணத்திலே சிரமதான சர்வோதய இயக்கத்தை விஸ்தரிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார். சமுகத்தில் கடையவனுக்கும் கடைத்தோற்றமென்பதே சர்வோதயம்.

ஒருவர் மீது நமக்கு உண்மையில் அன்பு ஏற்படின், அதனுல் நமக்கு கிடைக்கும் இன்பத்தை விளக்க முடியாது எல்லா உயிர்கள் மீதும் நமக்கு அன்பு ஏற்பட முடியுமாயின், அதனுல் கிடைக்கும் பேரின்பத்தை அளவிட முடியுமா?

தமிழகத்தில் இருந்து வெளியாகும் கிராம ராஜ்யம் பத்திரிகை ஈழத்து ஆரியரத்னவைப் பாராட்டியுள்ளது. இந்த இயக்கம் இங்கு இரு சமூகங்களுக்கிடையில் நட்பை வளர்ப்பதுடன், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நட்புப் பாலம் அமைக்கிறது. அவர் இந்தியா சென்றிருக்கையில், ஆசாரிய வினேபாவை சந்தித்து ஈழத்துக்கு வரவேண்டுமென்று வேண்டினுர்.

இலங்கை பிரதமர் அழைத்தால் வருவதாக அவர் உறுதி கூறினுராம். மகாத்மாகாந்தி நூற்றுண்டு ஜயந்தி விழாவுக்கு வினேபாபாவேயை இங்கு வருமாறு இலங்கைப் பிரதமர் அழைப்பாரா?

0 0 0

சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், கடிதத் தலைப்பிலுள்ள தமது பெயரில் 'செட்டியார்' என்ற சாதிப் பெயரை அடித்துள்ளார்.

0 0 0

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செலுத்த வந்த இருதேச பிரதமர்களும், அங்கு வட வியட்னும் தலைவர்களுடன் கலந்து பேசியதின் பயனாக ஒரு விஷயத்தை நனகு உணர்ந்திருப்பர். அவ்விரு நாடுகளும் தங்கள் வேற்றுமைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து நட்பாக வாழ்வதே, ஹோசிமினுக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி என்பதை உணர்ந்ததின் பயனே இரு நாட்டுத் தலைவர்களும், பீகிங்கில் சந்திக்கமுடிந்ததென்று ஊகிப்பது அதிக தவறுகாது. இது முதல் சந்திப்புத்தான். தங்கள் வேற்றுமைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதற்கும், நட்பைப் பலப்படுத்திக்கொள்வதற்கும் இது முதற்படியாக இருக்கவேண்டும்.

இதேசமயம் அவர்கள் இருவருக்கும் வியட்னும் சண்டையை ஒரு நல்ல முடிவுக்கு கொண்டுவரவேண்டிய ஒரு பெரிய கடமையுண்டு. செய்துவிட்ட ஒரு பெரிய இமாலயத்தவறை நேர்செய்யவே அமெரிக்கா விரும்புவதாயின், வியட்னுமின் இரு பகுதிகளையும் இணைப்பது பற்றிய நடவடிக்கையில் அது இனியும் குறுக்கே நிற்க முடியாது. இதே சமயம் சோவியத் பிரதமர் கோஸிஜின், ஹனேயில் இருக்கையில், வியட்னும் நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்தத் தாங்கள் தொடர்ந்து உதவியளிப்பதாக வடவியட்னும் தலைவர்களுக்கு உறுதியளித்துள்ளதாகத் தெரிகிறது. இதுபற்றி அமெரிக்க மனப்பான்மையில் உண்மையிலே மாறுதல் ஏற்பட்டிருப்பின் வியட்னும் போரை நிறுத்தி, அங்குள்ள உள்நாட்டுப் பிரச்னை சமாதானமாகத்தீர, ரஷ்யாவும், சீனமும் தடை செய்ய முடியாது. வியட்னும் மக்களுக்கு இம்மூன்று வெளி வல்லரசுகளும் செய்யக்கூடிய பெரிய உதவியும் இதுவேயாகும்.

---

முதல் அடியே சாய்ந்து விழுந்து விட்டதால் புதிய செம்புடன் பீலிக்ஸ் அடுத்தடுத்து கணைகளைத் தொடுத்தார்.

ஐ நா மனித உரிமை சாஸனத்தை இலங்கையும் ஒப்புக் கொண்டிருக்கிறது; இந்த மனித உரிமை சாஸனக் கருத்தரங்குகளுக்கு எங்கள் நீதியமைச்சரும் சென்று கலந்துகொள்கிறார் சிலர் மீது தவருக வழக்குத் தொடரப்படுகிறது. கைது செய்யப்பட்டு றிமாண்டில் வருடக் கணக்கில் இருந்த பின் விடுதலை செய்யப்படுகிருர்கள். காரணமில்லாமல் சிறைவாசமனுபவித்து வெளிவருபவர்களுக்கு மனித உரிமைச் சாஸனத்தின் அடிப்படையில் நஷ்ட ஈடுவழங்கப்பட்டால் என்ன? என்ற ஒரு கோள்வியைப் போட்ட பீலிக்ஸ் தமது பேச்சில் மக்கிரத்வத்தை, வணஹென்பிட்டி கெதர ஞான சீக, மேஜர் ஜெனரல் ஏ. ஆர் உடுகம ஆகியோர்மீது வழக்குத் தொடரப்பட்டதை யும் அவர்கள் சிறையில் வைக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டினுர். நான்கு பக்கமும் திரும்பிப்பார்த்துப் பார்த்துப் பேசிய பீலிக்ஸ், பிரமுகர்கள் கலரியிலிருந்து விவாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்த நீதியமைச்சர் செனட்டர் விஜயமானேயையும் அடிக்கடி பார்த்துக்கொண்டார். சிலருக்குச் சலுகை செய்யவும் மற்று சிலர் மீது பழிவாங்கவும்தானு வாக்காளர்கள் எங்களை இங்கே அனுப்பிவைத்திருக்கிருர்கள் என்று கேட்ட போது எதிர்ககட்சியிலிருந்த அங்கத்தவர்கள் சிலர் ''வெட்கம்வெட்கம்'' என்று குரல் கொடுத்தனர். சில வழக்குகளில் 'பிராசிக்கியூஷன்' தரப்புவிசாரணை முடிந்ததும் எதிர்தரப்பு விசாரணை செயப்படாமலே வழக்குத் தள்ளப்பட்டு எதிரிகள் விடுதலை செய்யப்படுகின்றனரென்றும் நாவசியமாக இப்படி வழக்குசள் தொடரப்படுவதை நீதிபதிகளே கண்டித்திருக்கிருர்களென்றும் பீலிக்ஸ் கூறிய போது ''அப்படி எங்கே நடந்திருக்கிறது?'' என்று உதவி நீதியமைச்சர் கேட்கவும் எத்தனையோ வழக்குகள், எத்தனையோ சம்பவங்கள் இருக்கின்றன என்று பதிலளித்தார், பீலிக்ஸ் எங்கே எந்த வழக்குகள்

...கதியில் கட்ட நிதியும் அனுமதித்தால் அந்தப் பத்துரூபாய் அந்தப் பெண்ணின் அன்றைய செலவுக்கே போதுமா? என்று கேட்டார். ஜீவனும்சப் பணத்தை வீட்டிலிருந்தபடியே அல்லது வீட்டுக்குச் சமீபத்திலுள்ள தபாற்கந்தோர்கள் மூலம் பெறுவதற்கு வழி செய்ய முடியாதா என்ற கேள்வியுடன் தனது யோசனையையும் தெரிவித்துக்கொண்டார்.

## சொத்து விபரம்

அமைச்சர்கள் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொத்துக்களை வெளியிடக் கோருவதற்குப் பிரதமர் சட்டம் கொண்டுவரவிருப்பது பற்றிக் குறிப்பிட்ட பீலிக்ஸ், ''சட்டம் வந்த பின்தானு சொத்துக்களை வெளியிட வேண்டும்?'' என்று அரசாங்கத் தரப்பினரைப் பார்த்துக் கேட்டார். நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை நாமே வகுத்து அதன்படி நடப்பதுதான் சிறந்தது என்று கூறிய அவர் இப்பொழுதே நாங்கள் (சுதந்திரக்கட்சியினர்) எங்கள் சொத்து விபரங்களை வெளியிடத் தயாராக இருக்கிறேம்'' என்றுர். சட்டம் கொண்டுவரப் போகிறீர்கள்; எப்படியான சட்டம் என்றும் பார்ப்போம்?'' சொத்து விபரங்களை இரகசியமாகச் சபாநாயகரிடம் தெரிவித்தால் போதும் என்று சொல்வீர்களா அல்லது மக்கள் அறியக்கூடியதாகச் சொல்வீர்களா? என்று ஆளும் கட்சியினரைப் பார்த்துக் கேட்ட பீலிக்ஸ், சொத்து விபரங்களை வெளியிட்டால் சீதனம் பாதிக்கும்; வங்கி நிலை தெரிந்தால் வியாபாரத்தில் 'ரூல்' பண்ணமுடியாது போகும் என்பன போன்ற பீதியைச் சிலர் கிளப்பி, சொத்துவிபரங்களை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் தடுக்கச் சிலர் முனைவார்கள் என்றுர். ''மக்களுக்கு எதையும் ஒழிக்காதீர்கள்?'' என்று அவர் எச்சரிக்கையும் விடுத்தார்.

## சமாதான சபைகள்

சில புத்தகங்களை வைத்துக்கொண்டு பீலிக்ஸுடனும், எம். பி. டி. சற் சிறீவர்த்தனவுடனும் சிறிது நேரம் ஆலோசனைசெய்துகொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, சமாதான சபைகளுக்கு சமாதானத்தில் நாட்டமில்லாதவர்கள் நியமிக்கப்படுவதாகக் கூறியதுடன் தனது தொகுதியில் உள்ள ஒரு சமாதான சபையின் தலை

உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்குள்ள விசேஷ சலுகையும் பாதுகாப்பும் நீக்கப்படவேண்டுமென்றும் இந்தச் சலுகையும் விசேஷ பாதுகாப்பும் நீக்கப்பட்டுவிட்டால் லஞ்சக் குற்றச்சாட்டுகள் பல வெளியாகும்என்றுர். ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவர் விபத்தில் சிக்கிவிட்டார், பொலிஸார்சபாநாயகருக்கு அறிவித்து அனுமதி பெற்றுக்கொண்டு சென்று கவனிப்பதில்லை. அதேபோல் லஞ்சக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவும் விசாரணை செய்யவும் சபாநாயகரின் அனுமதிபெறவேண்டிய அவசியமில்லாமல் செய்யவேண்டும் என்பது திரு. பிரின்ஸ் குணசேகராவின் வாதம். நீதிமன்றங்களில் இன்னும்எதற்காக ஆங்கிலத்தில் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்று கேட்ட அவர் சிங்களத்தில் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்றுர். தமிழ்ப்பகுதி நீதிமன்றங்களில் தமிழில் அலுவல்கள் நடைபெறுவதை அவர் ஆட்சேபிக்கவில்லை. தமிழில் அலுவல்கள் நடைபெறவேண்டுமென்பதுதானே சமஷ்டியினரின் விருப்பமும் என்று பின்னுலுள்ள தமிழரசு அங்கத்தவர்களைப்பார்த்தபடியே கூறினுர்.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சீனச்சார்பு கம்யூனிஸ்ட்கட்சியின் ஒரேயொரு பிரதிநிதியான கம்பகா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயகா, மக்களால் நிராக்ரிக்கப்பட்ட எவரும் சுப்ரீம்கோர்ட்

தொகைக்கு மேல் வாங்கக்கூடாதென்று கட்டுப்படுத்த வேண்டுமென்றும்கூறியதிரு. கலுகல்ல குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகவாங்கும் வழக்கறிஞர்கள் தொடர்ந்து தொழில் புரிவதைத் தடைசெய்யக்கூடியதாக சட்டம் கொண்டுவருவீர்களா? என்று அரசாங்கத் தரப்பினரைப் பார்த்துக் கேட்டார்.

''உங்கள் வழக்கறிஞர்கள்?'' என்று அரசாங்கத் தரப்பிலிருந்து ஒரு சிலகுரல்கள்(பீலிக்சைப் பார்த்தபடி) எழுந்தபோது 'எங்கள் வழக்கறிஞர்கள் தயார்' என்று கலுகல்லையிடமிருந்து பதில் வந்தது.

அட்டர்ணி ஜெனரல் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து அவரைப்பாதுகாக்கவேருவரைப் பிரதிநிதி முனைந்தார். சொலிசிட்டர் ஜெனரலாக இருந்த ஜனுப் அமீர் முன்னைய அரசாங்கத்தின் சில பாரபட்சமான நடவடிக்கைகள் காரணமாக வெளியேறுதிருந்தார் அவர்தான் அட்டர்ணிஜெனரலா கியிருப்பாரென்று கூறிய வேருவரைப் பிரதிநிதி அமீரின் நியமனத்தை அரசியல் நியமனம் என்று கூறுவோர் முன்பு திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமியை அசைஸ் கமிஷனராக நியமித்தது அரசியல் நியமனம் இல்லையா? என்று கேட்டார்.

வெட்டிச் சுற்றாடல் மாணவர்களுக்கு அரிய தொண்டு புரிய வேண்டும் என்றுர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில வித்தியாதிகாரி திரு எஸ் தணிகாசலம் பேசுகையில், அகில இலங்கை ரீதியில் நிகழ்ந்த தமிழ் தினவிழாப் போட்டிகளில் அருணேதயா கூடிய இடம் பெற்றது பாராட்டத்தக்கது. அதிலும் பேச்சுப்போட்டியில் தான் இரு பிரிவில் முதலிடம் பெற்றுள்ளது இங்கு வந்து கூட்டங்களில் பேசுபவர்களின் பேச்சைக் கேட்டதால்தான் இவர்கள் இத்துறையில் முன்னேற முடிந்தது என்றுர்.

திரு. எம். வைரமுத்து ஸ்தாபகர் நினைவுரை நிகழ்த்துகையில், ''இப்பாடசாலை ஆரம்பித்த காலத்தில் இப்பகுதியில் இரு கிறிஸ்தவப் பாடசாலைகள் தான் இருந்தன இப்பாடசாலை அன்று ஒரு ஓலைக் கொட்டிலில்தான் ஆரம்பமானது அன்று இருந்த அரசு சைவத்துக்குத் தொண்டு செய்யாததால் சைவ வளர்ச்சிக்காக இப்பாடசாலையில் கல்வி பயிற்றிய ஆசிரியர்கள் சம்பளம் பெருது இந்தப் பாடசாலையின் வளவில் இருந்த ஓலையையும், புல்லையும்தான் முதலில் சம்பளமாகப் பெற்ருர்கள் இது இருபதாண்டு வரை நீடித்திருந்தது ஆகவே இப்பாடசாலை சீர்பெற ஸ்தாபகர் அருணசலம் உடையார் மேலும் பாடசாலையை வளர்க்க ஆரம்பமானுர்'' என்றுர்.

...டியார் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், கடிதத் தலைப்பிலுள்ள தமது பெயரில் 'செட்டியார்' என்ற சாதிப் பெயரை அடித்துள்ளார்.

0 0 0

ஆலின்கீழ் அறங்களெல்லாம் அன்றவர்க் கருளிச் செய்து. நூலின் கீழவர்கட் கெல்லாம் நுண் பொருளாகி நின்று, காலின் கீழ் காலன் தன்னைக் கடிகத்தான் பாய்ந்து பின்னும், பாலின் கீழ் நெய்யுமானுர் பழனற்றம் பரமனுரே.

-அப்பர் சுவாமிகள்

---

யாழ். இந்து

## சாரணா ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் ஆண்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு மேற்படி கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். உதவி சாரண மாவட்ட ஆணையாளர் திரு. சி. முத்துக்குமாரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் 'பாசறைத்தீ' கதம்ப நிகழ்ச்சிகள், சாரணர் விளையாட்டுக்கள் ஆகியன இடம்பெறும். (கா. நி.)

---

# ''காந்திஜியும் லெனினும் இணைந்த உருவம் 'ஹோ'

## மறைந்த வட வியட்னும் தலைவருக்கு அஞ்சலி

மல்லாகம், வெள்ளி

''காந்திஜியில் காணப்படும் எளிய வாழ்க்கை முறையும் லெனினின் புரட்சி சிந்தனையும் இணைந்து உருவாகிய பெருந் தலைவரே ஹோ-சி-மின்''

வடவியட்னும் ஜனுதிபதி ஹோ-சி-மின் மறைவு குறித்த அனுதாபக் கூட்டம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் யாழ. மாவட்ட கிளை அலுவலகத்தில் நடைபெற்ற போது தலைமை வகித்துப் பேசும்போது திரு வ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

அன்னியர் பல நூற்ருண்டு காலமாக ஆசிய ஆபிரிக்க நாடுகளை ஆண்டுள்ளனர். ஆனுல் இந் நாடுகளின் இயற்கை வளங்களை கொள்ளை கொண்டு வறுமைப் படுத்தினரேயின்றி அந் நாடுகளது வளர்ச்சிக்கு வழி வகுக்கவில்லை. எனவே தான் காந்தி, ஹோ-சி-மின் போன்ற பெரியார்கள் தமது தேச விடுதலைக்கு குரல் கொடுத்தனர். பிரெஞ்சுக்காரர் வியட்னுமைவிட்டு யப்பானியரால் வெளியேற்றப்பட்டனர் யப்பானியரை எதிர்த்து ஆரம்பித்த விடுதலை இயக்கம் டாக்டர் ஹோவின் தலைமையில் பூரணமாக பரிணமித்தது 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதம் தாங்கி போராட்டத்தை நடாத்தி வீர வியட்னுமியரின் நிகர் அற்ற தலைவராக விளங்கினுர்.

தென் கிழக்காசியாவில் தானியக் களஞ்சியமாக விளங்கும் இந்தோ சீனு குடா நெல் விளைச்சலுக்கும் கனிப் பொருட்களுக்கும் உலகப் பிரசித்தி பெற்றது. எனவேதான் தோல்வி கண்ட பிரான்ஸியரை யடுத்து தொடர்ந்து உதவிக்கு வந்த அமெரிக்கரும் பல லட்சம் பேரை பலி கொடுத்தும் செல்வத்தை அனுபவிக்க துடியாய்த் துடித்தனர்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, குணேந்திரராசா. லியனகே ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

---

## அடுத்த பருவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் சட்டவிரோதமாக கூட்டம் கூடி கணபதி வைத்தி என்பவரை கொலை செய்ததாகவும் மொத்தம் 13 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் என். சத்தியேந்திரா, அட்வக்கேட் ஆர். ஆர். தங்கராசா, அட்வக்கேட் எஸ். சிவபாக்கியநாதன், அட்வக்கேட் வி ஜெகஜோதி ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் கே. சிற்றம்பலத்தின் அனுசரணையுடனும் ஆஜரானுர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் ஆர். முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார்.

---

# 'என்னையும் மனைவி பிள்ளைகளையும் காப்பாற்றவே வெட்டினேன்'

## துன்னலை வழக்கில் முதலாம் எதிரி சாட்சியம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

என்னையும், எனது மனைவி, பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காகவே, வளவிற்குள் புகுந்த காயமடைந்தவரை இருமுறை கத்தியால் வெட்டினேன் என துன்னலை வடக்கைச்சேர்ந்தவரும் முதலாம் எதிரியுமான கா. சண்முகசேகரம்பிள்ளை என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில்மேற்கண்டவாறுகூறினுர்.

இவ்வழக்கு துன்னலை வடக்கைச் சேர்ந்த கா சண்முகசேகரம்பிள்ளை, ச. சற்குணனந்தம் ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த சி. கனகரத்தினம் என்பவரை கத்தியால் வெட்டி படுகாயப்படுத்தியதாக பொலிஸாரால் குறம்சாட்டித் தொடரப்பட்டது.

சண்முகசேகரம்பிள்ளை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது -

சம்பவதினம் நான் வேலைக்குப்போகப் புறப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்போது எனதுமகன் சண்முகநாதன் குளறிக்கொண்டு 'குத்தவாருன்' என்று சொல்லிக்கொண்டு படலைக்குள் ஓடிவந்தார் அதைத்தொடர்ந்து காயமடைந்தவரும் படலைக்குள் கையில் கிறிஸ்கத்தியுடன் வந்துவிட்டார். படலைக்குள் வந்தவர் வேலைக்கு புறப்பட்டுக்கொண்டு படலைக்குள் வந்த என்னை கிறிஸ் கத்தியால் குத்த முயற்சித்தார். உடனே எனக்கு காயமடைந்தவர் முன்பும் கொலைக்குற்றம் செய்தவர் என எண்ணி எங்களையும் கொலைசெய்து போடுவார் என நினைத்து சமையலறைக்குள் இருந்த கத்தியால் இருமுறை கையிலும், தோளிலும் வெட்டினேன். உடனே அவர் திரும்பி ஒழுங்கைக்கு ஓடிவிட்டார். பிறகு அவரது ஆட்கள் வந்து என்னைத் தாக்குவார்கள் என்றும், பொலிசார் வந்து என்னை கைதுசெய்துகொண்டு போவார்கள் என்ற பயத்தினுலும் நான் எனது ஊரான அச்சுவேலிக்கு போயிருந்தேன். எட்டு நாட்களின்பின் பொலிசில் சரண்அடைந்தேன்.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளை சுற்றவாளியாகக்கண்டு விடுதலைசெய்தார்.

---

## கொலை வழக்கு

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 19-ம் தேதி வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட விருந்த மீசாலை வடக்கு கொலை வழக்கை நீதியரசர் ஓ. எல். டி. கிரேஸ்டர் அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்தி வைத்தார்.

---

## தேவை

புதிதாகத் திறக்கவிருக்கும் டாம்பிகா இன்டஸ்றீஸ் நெசவு நிலையத்துக்கு நன்கு பயிற்சிபெற்ற பெண்கள் உடன்தேவை. விபரங்கட்கு அன்னம்சாறிவேர்க்ஸ், மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 1398

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org